www.padippakam.com

# தமிழ்த் தேசம்

ஆசிரியர் : தியாகு

கடல் : 2
அலை : 3

தி.பி. 2030 மேழம்
கி.பி. 1999 ஏப்பிரல்

நன்கொடை
ரூ. 5.00



## "ஓசலானை விடுதலை செய்"

தமிழ் தமிழர் இயக்கத். திங்களேடு

படிப்பகம்

www.padippakam.com

## ஏப்பிரல் : 25 நூறு தமிழறிஞர்கள் சாகும்வரை பட்டினிப்போர்

தமிழ்ச் சான்றோர் பேரவை கடந்த நவம்பர் திங்கள் நடத்திய தமிழகப் பெருவிழாவின் போது நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, தமிழ் வழிக்கல்வியை வலியுறுத்தியும், தமிழ்ப் படித்தோர்க்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை தரக்கோரியும் நூறு தமிழறிஞர்கள் பட்டினிப் போர் நடத்தப் போவதாக அறிவித்திருந்தது.

அதன்படி, தமிழகமெங்கும் தமிழ்வழி கல்வி பற்றிய பரப்புரைகள் தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் நடந்தேறிவருகின்றன. இந்நிலையில் வருகின்ற ஏப்ரல 25ம் நாள் நூறு தமிழறிஞர்கள் பட்டினிப் போர் நடத்தப் போவதாக தமிழ்ச் சான்றோர் பேரவை அறிவித்துள்ளது. பட்டினிப் போர் துவக்கநாளில் தமிழ் வழிக்கல்வியை ஆதரித்து பிரமாண்ட பேரணியும் நடைபெறவிருக்கிறது.

சென்னை மாகாணம் மதராஸ் என்றழைக்கப்பட்ட போது, அதனை எதிர்த்து தமிழ்நாடு என்று பெயர் சூட்டக்கோரி திரு. சங்கரலிங்கனார் 79 நாட்கள் பட்டினிப்போர் நடத்தி உயிர்துறந்தார். காங்கிரசு ஆட்சியில் இம்முழக்கம் செத்துப் போனதாக நினைத்துக் கொண்டிருந்தவர்களுக்கு மத்தியில் தி.மு.க ஆட்சிக் கட்டிலேறி தமிழ்நாடு என்ற பெயருக்கும் உயிர் தந்து சங்கலிங்கனாரின் ஈகத்திற்கு உரமூட்டியது.

ஆனால் இன்றைய தி.மு.க. வோ தமிழ்நாடு என்னும் பெயருக்கு பொருத்தப்பாடாக திகழும் தமிழ்மொழியை அங்கீகரிக்க மனமில்லாமல் பழைய காங்கிரசு பாணியில் போய் கொண்டிருக்கிறது என்பது வரலாற்று உண்மை.

1965ல் தமிழ் மாணவர்களின் தேக்கு மரத்தேகங்கள் தமிழுக்காக தீக்குளித்த போது, அன்றைக்கிருந்த பக்தவத்சலம் ஆட்சி தமிழக மக்களால் தூக்கியெறியப்பட்டது. காங்கிரசு கட்சியும் அவரோடு ஆழக்குழி தோண்டு புதைக்கப்பட்டது.

தமிழைச் சொல்லி நாற்காலி பிடித்த திராவிட இயக்கங்கள் முப்பது ஆண்டுகளாக ஆட்சி நடத்தியும் கூட, தமிழால் இன்னும் மூச்சு விடமுடியவில்லை. இத்தகைய இழிநிலைக்கு எதிராக தமிழ்வாழ தங்களது மூச்சை நிறுத்தி கொள்ள தமிழறிஞர்கள் அணியமாகி புறப்பட்டு விட்டனர். கருணாநிதி அரசும், இன்னும் மவுனம் கலைத்தபாடில்லை. இறுதியாக ஒன்றை கூற விரும்புகிறோம். கருணாநிதி அவர்களே, வரலாற்றின் துரோக பக்கங்களில் பக்தவத்சலம் ஒருவர் மட்டுமே இருக்க வேண்டும் என்பது எங்களது விருப்பம்.

—கதிர்வேல்

## படிப்பாளர் பக்கம்

சென்ற தமிழத்தேசம் இதழ் கண்டேன். இந்திய தேசிய வாதிகளின் இந்துத்துவ கொள்கையை முறியடிக்க வேண்டுமானால். ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் தத்தம் தேசிய இனங்களுக்கான தன்னுரிமைப் போராட்டத்தை முன்னெடுப்பதன் மூலமே சாத்தியமாகும். மதச்சிறுபான்மையாய் ஒன்றினைவது என்பது இன்னொருபுறம் இந்துத்துவ கொள்கை வளர்ந்து வலுப்பெறவே வழிவகுக்கும். இதை வலியுறுத்திய தலையங்கம் சிறப்பானது.

சி. சந்திரமோகன்
உலத்தங்கரை

கொள்கையும் குடும்பமும் படித்தேன். ஆங்கில வழிப்பள்ளியில் பிள்ளைகளை படிக்க வைக்கும் தமிழாசிரியர் உள்ளிட்ட தமிழ்ப் பற்றாளர்களும், கோயிலில் வழிபடும் குடும்பத்தினரை உடைய பகுத்தறிவுவாதிகளும் குழப்பமடையவும், குற்ற உணர்வில் தவிக்கவும் தேவை இல்லை. தொடர்ந்து நமது கொள்கைகளை வளர்த்தெடுப்பதையும், சுற்றத்தார் நண்பர்களை நம்கொள்கை வழி திருப்பி நாம் ஏற்றுக்கொண்ட கொள்கைகளின் சிறப்பை அவர்களை அறியச் செய்வதும், அதன்மூலம் அவர்கள் ஆதரவை நாம் பெறுவதையும் நேர்மையாய், உறுதியாய் நடத்திக் காட்டினாலே போதும்.

பூவை. செந்தமிழன்
சென்னை

• • •

டான்பீரினின் – ஆயர்லாந்து விடுதலைக்கான எனது போராட்டம், கட்டுரை படித்தேன். இப்படிப்பட்ட வரலாற்றுச் செய்திகள் தொகுக்கப்பட்டு தொடர்ந்து வெளிவரவேண்டும். பல்வேறு தேசிய இனங்களின் விடுதலைப் போராட் டங்கள் பற்றி நாம் அறிந்து கொள்வது, நமது தேசிய இன உரிமைப் போராட்டதைக் கொண்டு செல்வதில் நமக்கு உதவும்.

க. சிதம்பரச் செல்வன்
நெய்வேலி

www.padippakam.com


# தமிழ்த் தேசம்

திருவள்ளுவராண்டு 2030
கி.பி. 1999 ஏப்பிரல்
கடல் : 2 அலை : 3

*வெளியிடுபவர்:*

**ச. நாத்திக நந்தனார்**
**ஓட்டேரி, வண்டலூர் அஞ்சல்,**
**சென்னை – 600 046**

*ஆசிரியர்:*

**தியாகு**

*துணை ஆசிரியர்:*

**தாம்பரம் தமிழ்மணி**

*அச்சிட்டோர்:*

**அன்பு அச்சகம்,**
மதுரை.

*இதழ் பற்றிய அனைத்துத் தொடர்புகளுக்கான முகவரி:*

**செ. வேலுச்சாமி**
123, சௌராட்டிரா ஆசிரியர் குடியிருப்பு, பாண்டியன் நகர், மதுரை – 625 009.


## திருவோட்டிலிருந்து பிச்சை!

**1999–2000** ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைத் தமிழக முதல்வரும் நிதித்துறை அமைச்சருமாகிய திரு. மு. கருணாநிதி தமிழக சட்டப்பேரவையில் முன்வைத்துள்ளார். ஆளும் கட்சியும் அதன் தோழமைக் கட்சிகளும் இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்றிருப்பதிலும், செயலலிதாவும் எதிர்கட்சிகளும் கடுமையாகக் குறை கூறியிருப்பதிலும் வியப்பொன்றுமில்லை. இது ஆண்டுதோறும் நடப்பதுதான்.

ஆளுங்கட்சி எதுவானாலும், முதலமைச்சர் அல்லது நிதியமைச்சர் எவரானாலும், ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையிலும் சில நல்ல அறிவிப்புகள் இருக்கத்தான் செய்யும். அதேப் போல் சில சுமைகளும் இருக்கத்தான் செய்யும். எதிர்கட்சித் தலைவர்கள் எப்படியும் குறை கூறத்தான் செய்வார்கள்.

இந்த வழக்கமான சடங்குகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு நிதிநிலை அறிக்கை பற்றி வேறு அடிப்படையான கோணத்தில் ஆராய வேண்டும்.

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின்படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தொகை 50லட்சம் ரூபாயாக உயர்த்தப் பட்டுள்ளது. தூர் வாருவதற்கு 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது, நகர்ப்புற குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு நூறு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழக மக்களின் தேவைகளுடன் ஒப்பிடுகையில் இந்த ஒதுக்கீடுகள் எவ்வளவு அற்பமானவை என்பதைச் சொல்லத் தேவையில்லை ஆனால் இதற்கு மேல் செலவிட பணத்திற்கு எங்கே போவது?

முதல்வர் முன் வைத்துள்ள வரவு செலவுத் திட்டத்தின்படி வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ. 15,867.78 கோடி. வருவாய்க் கணக்கில் செலவுகள் ரூ. 18,500.32 கோடி. வரவு ரூ. 16,000 கோடி என்றும்,



படிப்பகம்

www.padippakam.com

செலவு 19,000 கோடி என்றும் வைத்துக் கொள்வோம். புதிய வரிகளைக் கொண்டு சரிக்கட்டியது போக நிகரப் பற்றாக்குறை சுமார் ரூ 800 கோடி.

தமிழக மக்கள்தொகை 6 கோடி எனக் கொண்டால் ஒருவருக்குச் செலவு வெறும் 3,000 ரூபாய்தான். இந்தச்சிறு தொகையிலும் கணிசப் பகுதி நிர்வாகச் செலவுகளுக்குப் போய் விடுகிறது. இதற்குமேல் அமைச்சர்கள், அதிகாரிகளின் ஆடம்பரங்கள், பகட்டான விழாக்கள், படாடோப விளம்பரங்கள் என்று எத்தனையோ வீண் செலவுகள். தமிழ்நாட்டின் ஒரு குடிமகனுக்கு 1,000 அல்லது 2,000 ரூபாய் செலவிடுவதாக வைத்துக் கொண்டாலும் பெரிதாக என்ன சாதித்து விட முடியும்? அதனால் ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையும் ஒருசில பிச்சைக்காரத் திட்டங்களை அறிவித்து, அவற்றையே பெருஞ்சாதனையாகக் காட்டி விளம்பரப் படுத்திக் கொள்கிறது. இதைக் குறை கூறும் எதிர்கட்சி, ஆளுங்கட்சியாகி விட்டால் அதுவும் இதையே தான் செய்கிறது. ஏனென்றால் இவர்கள் தங்கள் பிச்சைக்காரத் திட்டங்களுக்காக தில்லியிடம் கையேந்தி நிற்கிறார்கள்.

தில்லியோ தமிழகத்தின் செல்வவளங்களை எல்லாம் கொள்ளையிட்டுச் சென்று குவித்து வைத்துக்கொண்டு அவ்வப்போது இந்த அற்பப் பிச்சைக்காரர்களுக்கு சொற்பப் பிச்சை இடுகிறது. தில்லியிடம் திருவோடேந்தி. அந்த ஒட்டிலிருந்து பிச்சையிடுவதற்கு பெயர் தான் மாநில அரசின் நிதிநிலை அறிக்கை என்பது.

இதில நல்ல[illegible]ாவது, கெட்டதாவது?!

## 19 தமிழர்களுக்கு மீண்டும் வேலை!

கர்நாடகத்தில் தலைமைக் கணக்கு அலுவலகத்தில் வேலை மறுக்கப்பட்ட 19 தமிழர்களுக்கு இப்போது மீண்டும் வேலை கிடைத்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. கர்நாடகத் தமிழர்கள் கிளர்ச்சி வகையிலும் சட்டவகையிலும் மேற்கொண்ட முயற்சிகளும், தமிழகத்தில் எழுந்த எதிர்ப்புக் குரலும், தமிழக முதலமைச்சரின் முன்னெடுப்பும் இந்த வெற்றியைப் பெற்றுத் தந்துள்ளன.

கன்னட தேசத்தில் கன்னடம் படிப்பதையம் தமிழ்த் தேசத்தில் தமிழ் படிப்பதையும், ஒவ்வொரு தேசத்திலும் அந்தந்தத் தேசத்தவருக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை கொடுப்பதையும் வலியுறுத்துகிற அதே போது, எந்த ஒரு தேசத்திலும் சிறுபான்மையினரின் வாழ்வுரிமை பறிக்கப்படக் கூடாது என்பதே தமிழ்தமிழர் இயக்கத்தின் நிலைப்பாடாகும். இந்த முறையில் கர்நாடகத் தமிழர்களின் வேலைவாய்ப்பு உரிமையை எமது இயக்கம் முழுமையாகவும் உறுதியாகவும் ஆதரித்து நிற்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

# கொள்கையும் குடும்பமும்

- சுப. வீரபாண்டியன்

## 8 – சமகால நிகழ்வுகள்

சென்ற இதழில் "முதலில் நம்மையும், நம் வீட்டையும் தூய்மைப்படுத்திக்கொண்ட பிறகுதான், நாட்டையும், பிறரையும் தூய்மைப்படுத்தும் முயற்சியில் இறங்கவேண்டும் என்பது சரியான வாதம்தானா?" என்ற வினாவோடு, தொடரை நிறுத்தியிருந்தேன்.

நாட்டைத் திருத்துமுன் வீட்டைத் திருத்த வேண்டும் என்பதும், ஊருக்கு உபதேசம் செய்யும் வாய்ச்சொல் வீரர்களாக மட்டும் நாம் இருக்கக்கூடாது என்பதும் சரிதான். அதேநேரம், சில நடைமுறைச் சிக்கல்களையும் நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

நாம் ஒரு வீட்டில் வாழ்கிறோம் என்றாலும், ஒரு நாட்டிற்குள் அடங்கிய வீட்டில்தான் வாழ்கிறோம் என்பது கவனத்திற்குரியது. வீடு நாட்டிற்குள்ளும், குடும்பம் சமுதாயத்திற்குள்ளும் அடங்கியே கிடக்கின்றன. ஆதலால், ஒரு நாட்டின் ஒரு சமுதாயத்தின் குணநலன்கள், வீட்டையும், குடும்பத்தையும் பாதிக்கவே செய்யும்.

நாம் என்பது இந்தச் சமூக நாற்றத்தையும், உள்ளடக்கித்தான்.

ஆகவே, சுற்றுப்புறம் சுகாதாரமாக இல்லாத சூழலில், நம் வீட்டை மட்டும் தூய்மையாக வைத்துக் கொள்வது இயலாத காரியம். சுத்தப்படுத்திக் கொண்டே இருந்தாலும், இன்னொரு பக்கம் தூசு சேர்ந்துகொண்டேதான் இருக்கும்.

அண்மையில், மாணவர்களுக்கு இடையிலே நடந்த ஒரு கலவரத்தில், என் மாணவர் ஒருவர் கொலை செய்யப்பட்டு விட்டதை அறிந்து மிகவும் கலங்கினேன். அப்போது மாணவர்கள் சிலர் போதையில் இருந்த செய்தியையும் அறிந்தேன். ஆண்டு விழாவோ, மாணவர் பேரவைத் தேர்தலோ வந்துவிட்டால், மதுவுக்கும், போதைக்கும் மாணவர்கள் பலர் அடிமையாகி, ஆடிப்பாடித் தள்ளாடும் காட்சி, இன்று பல கல்லூரிகளில் இயல்பான செய்தியாகிவிட்டது. இத்தகைய மோசமான சூழலில், நம் பிள்ளைகள் எவ்வளவு நல்லவர்களாக இருந்தாலும். நட்புக்காகவோ, நாகரிகம் என்று கருதியோ மதுவருந்தும் பழக்கத்திற்கு அவர்கள் அடிமையாகக் கூடிய வாய்ப்புகள் உள்ளன. நாம் வாழும் சமுதாயம் அழுகிப் போவதை அனுமதித்துக் கொண்டே, நம் பிள்ளைகலை மட்டும் நாம் காப்பாற்றிவிட முடியாது.

ஆகவே, நம் குடும்பத்தைக் குறையற்றதாக மாற்றிய பின்பே, சமுதாயச் சீர்திருத்தம் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்னும் வாதம் பொருத்தமானதன்று.

சமுதாயத்தையே திருத்திய சாக்ரடீசால், இறுதிவரை தன் மனைவியைத் திருத்த முடியவில்லை. காந்தியாரின் மகன்களில் ஒருவரே கள்ளுக்கும், போதைக்கும் கடைசிவரை அடிமையாய் இருந்ததை நாடறியும். பகுத்தறிவுக் கருத்துக்களைப் பரப்பிய நடிகவேள் எம்.ஆர். ராதாவின் பிள்ளைகள் பக்திமான்களாக உள்ளனர். இப்படிப் பல எடுத்துக்காட்டுகள் உண்டு.

இந்த இடத்தில், இன்னொரு செய்தியையும் நாம் அழுத்தமாக நெஞ்சில் பதித்துக்கொள்ள வேண்டும். இந்தக் கட்டுரையில் எடுத்து வைக்கப்பட்டுள்ள வாதம். காட்டப்பட்டுள்ள எடுத்துக்காட்டு எவையும். நாடு திருந்தும் வரை, வீடு பற்றிக் கவலை கொள்ளவோ, வீட்டைத் திருத்தும் முயற்சியில் ஈடுபடவோ தேவையில்லை என்று கூறவே இல்லை.

எவ்வாறு, வீட்டைத் திருத்திய பின்புதான் நாட்டு நலப்பணியில் ஈடுபட வேண்டும் என்பது போகாத ஊருக்கு வழியோ, அவ்வாறே, நாடு முழுவதும் நல்வழிப்பட்ட பின்தான், என் வீட்டை நான் திருத்த முடியும் என்று சொல்வதும் மிக மோசமான மோசடியாகும்.

ஒன்று முற்றிலும் முடிந்த பின்பே, இன்னொன்று தொடங்கும் என்பது உலக நிகழ்வன்று. நடைமுறையில் பல செயல்கள், சமகாலச் சம்பவங்களாகவே உள்ளன.

ஆகவே, வீட்டிலும், நாட்டிலும் நம் கொள்கைகளைக் கொண்டு செல்லும் திட்டம், ஒரே நேரத்தில் நடைபெற வேண்டும் என்பதே நாம் வலியுறுத்தும் செய்தி.

(தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

# உறைபனிக் காட்டில் ஈழநெருப்புடன்

-தியாகு

## 2. பாரீசு பெருமை

நவம்பர் 29ஆம் நாள் காலை 8 மணி அளவில் டென்மார்க் நாட்டின் பிலூன் நகரிலிருந்து புறப்பட்டு ஆம்ஸ்டர்டாமில் விமானம் மாறி மதியம் 1 மணி அளவில் பாரீசு சென்றடைந்தேன். அந்த அழகிய நகரத்துக்கு அழகிய நுழைவாயில் போன்ற அழகிய விமான நிலையம். கண்ணாடிக் கூண்டுகளின் வழியே ஏற்ற இறக்கமாய் நகரும் பாதைகளில் மிதந்து வெளியே வந்த போது தோழர்கள் காத்துக் கொண்டிருந்தார்கள்.

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு அலுவலகம் போய்ச் சேர்ந்த போது, அன்புடன் வரவேற்று, உடனே புறப்பட வேண்டுமென்று அவசரப் படுத்தினார் மனோகரன். இவர்தான் இயக்கத்தின் அனைத்துலகச் செயலகப் பொறுப்பாளர். இளைஞர்களுக்கெல்லாம் "மனோ அண்ணா". இவரது முழுப்பெயர் வேலும் மயிலும் மனோகரன். இது எனக்கு வேடிக்கையாகத் தோன்ற, பின்னொரு வேளையில் கேட்டே விட்டேன்.

வேல்லும் மயிலும் என் பது அவரின் தகப்பனார் பெயர். இப்படிக் கூட பெயர் இருக்குமா? அவர்கள் ஊரில் பலருக்கும் இப்படிப் பெயர் இருக்கிறது என்றார்.

பிற்பகல் 2 மணி அளவில் பாரிசுக்கு வெளியே அமைந்த அந்த அரங்கத்தை அடைந்தோம். வெளியில் கடுங்குளிர். உள்ளே வெப்பமூட்டியிருந்ததால் சாதாரண உடையிலேயே இருக்க முடிந்தது. இயக்கத் தொண்டர்கள் வெள்ளைச்சட்டை வேட்டி அணிந்து ஓடியாடி வேலை செய்து கொண்டிருந்தனர். எனக்காகவும் அவர்கள் ஒரு வெள்ளைச் சட்டை வாங்கி வைத்திருந்தார்கள். பெண் தொண்டர்கள் சிவப்புக் கரையிட்ட மஞ்சள்சேலை கட்டியிருந்தார்கள்.

சிறிது நேரத்தில் அரங்கம் நிறைந்துவிட்டது. கதிரைகளின் (நாற்காலிகள்) எண்ணிக்கை மட்டும் மூவாயிரம். உட்கார இடமின்றி பலர் நின்று கொண்டிருந்தனர். இவ்வளவு பெரிய கூட்டம் திரண்டிருந்தும் அமைதியாக இருந்தது தான் வியப்பு.

மனோ முதலில் என்னை அரங்கின் நுழைவாயிலுக்கு அழைத்துப் போனார். அங்கு ஒரு மேசையில் சில கும்பங்கள் வைக்கப்பட்டிருந்தன. குடத்தின்மேல் தேங்காய் வைக்கப்பட்டிருந்தது. ஓர் தாம்பாளத்தில் நெல் பரப்பபட்டிருந்தது. திருவிளக்குகள் ஏற்றப்பட்டிருந்தன. கிண்ணத்தில் சந்தனம் வைக்கப்பட்டிருந்தது.

மனோ சந்தனத்தை எடுத்து நெற்றியில் திலகமிட்டுக் கொண்டார். பிறகு என்னிடம் "நீங்கள் வைத்துக் கொள்ள வில்லையா?" என்றார்.

"எனக்குப் பழக்கமில்லை"



படிப்பகம்

www.padippakam.com

"என்ன? பழக்கமில்லையா?" என்று சற்றே வியப்புடன் சிரித்துக் கொண்டு கேட்டார்.

பொதுவாக ஈழத் தமிழர்கள் தங்கள் நிகழ்ச்சிகள் அனைத்திலும் இந்தப் பூரண கும்ப வரவேற்பு வைத்திருப்பதைப் பிறகு தெரிந்து கொண்டேன். இது இந்து மதச் சடங்கா? அல்லது தமிழர்களின் இனப் பண்பாடு தொடர்பான சடங்கா? என்பது எனக்கு இன்னும் தெரியவில்லை.

தமிழீழத் தேசியக் கொடியை மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் ஏற்றுதல், மாவீரர் நினைவுச் சின்னத்தின் எதிரில் ஒவ்வொருவராக விளக்கு வைத்து வணங்குதல் என்று முறைப்படி நிகழ்ச்சிகள் தொடங்கின.

விரிந்தகன்ற விழா மேடையே மாவீரர் துயிலும் இல்லத்தைப்போல் அமைக்கப்பட்டிருந்தது. கரும்புலிகள் போல் உடுத்திய "சிறுவர் சிறுமியர் வீர நடனம், யாழ்ப்பாண நிலவரத்தைக் காட்டும்படியான நாடகம், இளம் மாணவர்களின் மேடைப் பேச்சுகள், இசை பாடல்கள்" என்று நிகழ்ச்சிகள் களைகட்டின.

முன்வரிசையில் எனக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தவர் ஒரு வெள்ளைக்காரர். நாங்கள் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து வைக்கப் பட்டோம். அவர் சுவீடனைச் சேர்ந்த பேராசிரியர் பீட்டர் ஷால்க், இடையிடையே உரையாடிக் கொண்டிருந்த போது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

அங்கு அறிமுகமான மற்றொரு பேராசிரியர் புதுவையிலிருந்து சென்று பிரெஞ்சு நாட்டிலேயே குடியிருந்து விட்ட சுகிர்தராசா. மேடையிலும் அவர் உணர்ச்சி பொங்க உரையாற்றினார். பிரபாகரனின் தலைமையில் விரைவில் தமிழீழம் விடுதலை பெறும் என்று நம் பேராசிரியர் ஒருவர் முழக்கமிடுவதைக் கேட்க இனிமையாகத் தான் இருந்தது. கிளிநொச்சி போர்க்கள வெற்றியின் பெருமைகளை அவர் அடுக்கடுக்காக எடுத்துரைத்தார்.

அனைத்துலகச் செயலகப் பொறுப்பாளர் மனோகரனும் உரையாற்றினார். தலைவர் பிரபாகரனின் மாவீரர் நாள் செய்தியைச் சுட்டிக்காட்டி புலம்பெயர் நாடுகளில் தமிழர்கள் இன்னும் பெரிய அளவில் பங்காற்ற வேண்டியதன் தேவையை வலியுறுத்துவதாக அவரது உரை அமைந்தது.

பேசுவதற்கு என் பெயர் அறிவிக்கப் பட்டு நான் மேடையேறிய போது, தமிழகத்திலிருந்து வந்திருப்பவன் என்ற முறையில் என்னை வரவேற்றுக் கூட்டத்தினர் கையொலி எழுப்பினர். தமிழகத்திடம் அவர்கள் கொண்டிருக்கும் அன்புக்கும் நம்பிக்கைக்கும் இது ஓர் அடையாளம்.

மாவீரர் நாள் தமிழீழத்தில் மட்டுமல்லாமல் உலகின் பல்வேறு பகுதிகளிலும் கொண்டாடப்படும் சிறப்பை நான் எடுத்துரைத்தேன். பிரெஞ்சுத் தலைநகரில் இந்த நாள் கொண்டாடப்படுவதன் தனிச் சிறப்பையும் விவரித்தேன்.

1789ஆம் ஆண்டில் உலகின் முதல் சனநாயகப் புரட்சியாகிய பிரெஞ்சு புரட்சி இந்த மண்ணில் தான் நடந்தேறியது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்



படிப்பகம்

www.padippakam.com

என்னும் முப்பெரும் முழக்கங்கள் அந்தப் புரட்சியிலிருந்து தான் உலகிற்குக் கிடைத்தன. அந்தப் புரட்சியின்போது இந்த மண்ணில்தான் ஆதிக்க சக்திகளின் தலைகள் உருண்டு விழுந்தன.

1848ஆம் ஆண்டில் இதே பாரீஸ் நகரத்தில் தான் கார்ல் மார்க்சும், பிரெடரிக் எங்கெல்சும் கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையை வரைந்து வெளியிட்டார்கள். முதலாளித்துவப் பெருமலையை உடைக்கப் பிறந்த அந்தச் சிற்றுளி இந்த மண்ணிலேதான் வார்க்கப் பட்டது.

1871இல் உலகின் முதல் பாட்டாளி வர்க்கப் புரட்சி இந்தப் பாரீஸ் நகரத்திலேதான் நடந்தேறியது. சில நாட்களே என்றாலும் பாரிஸ் கம்யூன் என்ற பெயரில் பாட்டாளி வர்க்கம் இந்த மண்ணில் ஆட்சி அதிகாரம் செய்தது. பாரீஸ் கம்யூனின் வெற்றி மட்டுமல்ல, வீழ்ச்சியும் கூட உலகப் பாட்டாளி வர்க்கத்தின் கருத்துச் செல்வத்துக்குப் பெரும் பங்களிப்புச் செய்தது. அரசு குறித்து மார்க்சியப் பார்வையை அது செழுமைப்படுத்தியது.

இரண்டாம் உலகப் போரின் போது அரசு மண்டியிட்ட போதிலும் விடுதலை வீரர்களும் மக்களும் பாசிசத்தை எதிர்த்து இந்தப் பரெஞ்சு நாட்டுல் தான் வீரஞ்செறிந்த போர் புரிந்தனர்.

வியத்நாமின் தந்தை, விடுதலை வீரர் ஹோசிமின் தங்கிப் பணி செய்த நகரம் இந்தப் பாரீஸ். அறுபதுகளின் பிற்பகுதியில் வியத்நாம் மீதான அமெரிக்கப் படையெடுப்பைக் கண்டித்து இந்தப் பாரீஸ் நகரத்தில் மாணவர்களும் இளைஞர்களும் கிளர்ந்தெழுந்து போராடினார்கள். அந்தப் போராட்டத்திலிருந்து தான் புதிய இடது சாரி இயக்கமே பிறந்தது.

இன்றைக்குங்கூட இந்தப் பாரீஸ் நகரம் பல்வேறு இன மக்கள் கலந்து வாழும் பெருநகரமாக இருப்பதோடு, பற்பல தேசிய விடுதலை இயக்கங்கள் கலந்து உறவாடும் மையமாகவும் திகழ்கிறது.

அன்று வியந்நாம் போராட்டத்தைப் போல் இன்று தமிழீழப் போராட்டமும் உலகளாவிய முக்கியத்துவம் பெற்றிருப் பதைச் சுட்டிக் காட்டினேன். குறிப்பாகத் சொன்னால், தெற்காசியாசியாவின் புரட் சிகர விடுதலைப் போராட்டங்களில் முதலாவதாகவும் முதன்மையானதாகவும் ஈழப் போராட்டம் திகழ்கிறது. இந்திய அரசு இந்தப் போராட்டத்தை நசுக்கத் துடிப்பதன் அடிப்படைக் காரணம் இதுதான். இந்திய இலங்கை உடன்பாட்டை நியாயப்படுத்தி சென்னைக் கடற்கரையில் ராஜீவ் காந்தி ஆற்றிய உரையை இதற்குச் சான்றாக எடுத்துக் காட்டினேன்.

தெற்காசியாவில் வன்முறையும், பயங்கரவாதமும் பரவிக் கொண்டிருந்ததாக ராஜீவ் சொன்னாரென்றால், புரட்சியும் எழுச்சியும் பரவிக் கொண்டிருந்தன என்று நாம் புரிந்து கொள்ள வேணடும். இந்தியா தேசிய இனங்களின் சிறைக் கூடமாக இருப்பதால் தெற்காசியாவில் ஒரு தேசிய இன விடுதலைப் புரட்சி வெற்றி பெறுவதை அது விரும்ப வில்லை. ஒரு காலத்தில் போராளிக் குழுக்களுக்கு அது செய்த உதவியும் கூட அடுத்துக் கெடுக்கிற முயற்சிதான். அந்த முயற்சி பலிக்காதவிடத்து எதிர்த்துக் கெடுக்கிற உத்திக்கு அது மாறிக் கொண்டது.



படிப்பகம்

www.padippakam.com

தன் சூழ்ச்சிக்கு மற்றவர்களெல்லாம் இரையான போது, பிரபாகரனும் விடுதலைப் புலிகளும் மட்டும் இரையாக மறுத்தார்கள் என்பதுதான் அவர்கள் மீது இந்திய வல்லாதிக்க அரசு கொண்ட கோபத்திற்குக் காரணம்.

இந்திய அரசும் சரி, சிங்களப் பேரினவாத அரசும் சரி, தமிழீழ மக்களுக்குப் பிரபாகரன் கட்டளையிட்டு வருவதாக எண்ணிக் கொள்கின்றனர், அல்லது சொல்லிக் கொள்கின்றனர். உண்மையில் மக்கள் இட்ட கட்டளையை நிறைவேற்று வதற்குத் தான் பிரபாகரனும் புலிகளும் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

பிரபாகரன், இந்தப் போராட்டத்தைத் தொடங்கிய போது, தமிழீழ மக்களை நம்பிக் களமிறங்கினரே தவிர, வேறு நாடுகளையோ அரசுகளையோ அல்ல. நம் மக்கள் புலம் பெயர்ந்து செல்வார்கள், அங்கிருந்து பங்களிப்புச் செய்வார்கள் என்று எதிர்ப்பார்த்து இறங்கவில்லை, இன்று தமிழீழம் புலம்பெயர்ந்த தமிழர்களாகிய உங்களை நம்பியிருக்கின்றதா அல்லது புலம்பெயர்ந்த தமிழர்களாகிய நீங்கள் தமிழீழத்தை நம்பியிருக்கின்றீர்களா? நாம்தான் தமிழீழத்தை நம்பியிருக்கிறோம் என்று மனத்திற்கொள்ளுங்கள். தமிழீழக் குடியரசு மலரும் போது உலகெங்கும் சிதறிக்கிடக்கின்ற தமிழர்களுக்கு மதிப்பும் மரியாதையும் வந்துசேரும். தமிழர்களுக்கு என்று ஒரு நாடு இல்லாத போது நமக்கு ப[illegible] ஏது? மரியாதை ஏது?

சுமார் ஒரு மணி நேரம் பேசினேன். என் பேச்சுக்குப் பிறகும் கலை நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. இரவு பத்து மணியளவில் நிகழ்ச்சி முடிந்து, குளிருக்குப் பொருத்தமான உடைகளுக்கு மாறி, சீருந்தில் ஏறித் திரும்பினோம்.

மூன்று இளந்தோழர்கள் தங்கியிருந்த வீட்டில் நானும் தங்க வைக்கப்பட்டேன். அடுத்து வந்த நாட்களில் பாரீசு நகரத்தில் தமிழ் மக்களோடும் கலந்து பேசி உறவாடி மகிழ்ந்தேன். அவர்களில் ஒரு சிலருக்கு இந்தியா பழக்கப்பட்ட நாடு. இந்திய சிறைகளும் கூட.

அடுத்த மாவீரர் நாளுக்காக சுவிட்சர்லாந்து செல்ல விசா எடுத்துக்கொண்டு அணியமாய் இருந்தேன்.

(தொடரும்)

## இந்திய இராணுவத்தில் எய்ட்சு நோய்

*1990க்கும், 1997க்கும் இடையே நடத்தப்பட்ட சோதனையில் இந்திய இராணுவத்தில் 1400க்கும் மேற்பட்டவர்கள் எச்.ஐ.வி. பாசிடிவ் கிருமியால் அதாவது எய்ட்சு நோயால் பீடிக்கப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது! இதை பாதுகாப்பு அமைச்சர் பெர்ணாண்டசு நாடாளுமன்றத்தில் ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆயுதப்படையினரிடையே எய்ட்சைத் தடுப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்குமான நலவாழ்வுக் கல்வி முயற்சியை முடுக்கி விட்டிருக்கிறார்களாம்.*



படிப்பகம்

www.padippakam.com

# ஒசலானை விடுதலை செய்!

—சுதா

பிப்ரவரி நடுவில் ஐரோப்பா இப்படித் தீப்பற்றி எரியும் என்று யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். குர்துத் தொழிலாளர் கட்சியின் தலைவர் அப்துல்லா ஒசலான்! கென்யத் தலைநகர் நைரோபியில் வஞ்சகமாய் வளைத்து பிடிக்கப்பட்டதை அடுத்து இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஐரோப்பாவெங்கிலும் குர்து இன மக்களின் கிளர்ச்சி தீயாய்ப் படர்ந்தது.

ஒசலான் பதினெட்டு ஆண்டுகளுக்கு மேலாகத் துருக்கிய ஆட்சியாளர்களால் தேடப்பட்டு வரும் புரட்சித் தலைவர். அரசத் துரோகம், பயங்கரவாதம் ஆகிய குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளன. நீண்ட பல ஆண்டுகள் சிரியா நாட்டில் தஞ்சம் புகுந்திரிந்த ஒசலான் 1998 அக்டோபரில் அங்கிருந்து வெளியேற்றப்பட்டார். உருசியாவில் புகலிடம் தேடி மாசுகோவுக்கும் சென்றார். உருசியா மறுத்துவிடவே இத்தாலிக்குச் சென்றார். அங்கும் இடம் கிடைக்காமல் நெதர்லாந்தில் தஞ்சம் கோரினார். மறுக்கப்படவே துருக்கிக்குப் பகை நாடாக கருதப்படும் கிரேக்க நாட்டிற்குச் சென்றார். இவ்வாண்டு பிப்ரவரி 2ஆம் நாள் கென்யா வில் கிரேக்கத் தூதரின் இல்லத்தில் தஞ்சம் பு ந்தார். பிப்ரவரி 14ஆம் நாள் கென்யா நாட்டின் பாதுகாப்புப் படையினர் தூதரக வளாகத்தை முற்றுகையிட்டனர். பிப்ரவரி 15ஆம் நாள் ஒசலான் தளைப்படுத்தப்பட்டுத் துருக்கிக்கு கொண்டு செல்லப்பட்டார். இப்போது அவர் இம்ராலி என்னும் சிறியதொரு துருக்கித் தீவில் தனியாகச் சிறை வைக்கப்பட்டுள்ளார்.

தங்கள் அன்புத் தலைவர் ஒசலான் பிடிபட்டு துருக்கிக்குக் கொண்டு செல்லப் பட்ட செய்தி ஐரோப்பாவெங்கும் சிதறிக் கிடக்கும் குர்து இன மக்களைக் கொதித்தெழச் செய்தது. இருபதுக்கும் மேற்பட்ட நகரங்களில் பல்வேறு நாட்டுத் தூதரகங்களுக்கும், ஐ.நா. அலுவலகங்களுக்கும் எதிரில் ஆவேசமான ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. ஐந்து பேர் தீக்குளிக்க முயன்றனர். துருக்கிய அரசுக்கெதிராகவும், ஒசலானை துருக்கிய அரசின் கையில் சிக்கவிட்ட கிரேக்க அரசுக்கு எதிராகவும், அவரைப் பிடிப்பதற்கு இரகசியமாய் துணை செய்த இசுரேலிய அரசுக்கெதிராகவும் குர்து மக்களின் கோபம் வெளிப்பட்டது. பெர்லினில் இசுரேலியத் தூதரகத்தினுள் நுழைய முயன்றவர்கள் மீது நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் மூவர் கொல்லப்பட்டனர்.

குர்து இனத்தைச் சேர்ந்த நிஜலா சொஸ்குன் என்ற 15 வயது பள்ளிச் சிறுமி லண்டனில் கிரேக்க தூதரகத்துக்கு எதிரில் தனக்கு தானே தீ வைத்துக் கொண்டாள். உடலில் நாற்பது விழுக்காடு எரிந்துவிட்ட நிலையில் அவளைக் காப்பாற்றினர்.



படிப்பகம்

www.padippakam.com

அமெரிக்க அரசு ஒசலானை பயங்கரவாதி என்று பட்டியலிட்டுள்ளது. அவரைப் பிடித்ததில் அமெரிக்க அரசுக்கும் பங்கு உண்டு என்று செய்திகள் வந்துள்ளன. அரசுகள் என்ன கூறிய போதிலும் கடந்து சில ஆண்டுகளில் குர்து இன மக்களது போராட்டத்தின் அடையாளமாக ஒசலான் கருதப்பட்டார் என்பதே உண்மை. பயங்கரவாதிகளைத் தேடுவதன் பெயரால் துருக்கிய அரசு குர்து இனமக்களின் மீது இராணுவத் தாக்குதல் தொடுத்துள்ளது. அது குர்து இன மக்களின் அடையாளத்தையும் முகவரியையும் மறுத்து, பண்பாட்டை அழித்து, அவர்களை "மலைவாழ்" துருக்கியர் என்றே குறிப்பிட்டு வருகிறது. பழமை வாய்ந்த குர்தியக் கிராமங்கள் நூற்றுக் கணக்கில் அழிக்கப்பட்டுள்ளன. இலட் சகணக்கான குர்திய மக்கள் வீடுவாசல் துறந்து அகதிகளாக்கப்பட்டுள்ளனர். துருக்கியில் ஒரு கோடியே இருபது லட்சம் குர்து மக்கள் உள்ளார்கள். இது அந்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் ஐந்திலொரு பங்கு ஆகும்.

குர்து இனமக்கள் இராக்கில் நாற்பது லட்சம் பேரும், ஈரானின் நாற்பது லட்சம் பேரும் சிரியாவில் பத்து லட்சம் பேரும் வாழ்ந்து வருகிறார்ரகள், ஜெர்மணி, உருசியா, ஆர்மீனியா ஆகிய நாடுகளிலும் கூட அவர்கள் சிறு அளவில் உள்ளனர்.

ஒசலான் கைது செய்யப்பட்டதோடு கைவிலங்கிடப்பட்டு, கண் கட்டப்பட்டு, மயக்க மருந்து ஊசிமூலம் ஏற்றப்பட்டு, ஒரு கொடுங் குற்றவாளியைப் போல் நடத்தப் பட்ட முறை அதிர்ச்சியடையச் செய்வதாய் உள்ளது. இந்த கோலத்தில் துருக்கியக் கொடியின் பின்னனியில் அவர் நிற்பதுபோல் படம் பிடித்து வெளியிட் டுள்ளது. துருக்கிய அரசின் இச்செயல் குர்திய தேசியத்தை ஆத்திரமூட்டுவதாகும்.

ஒசலான் உண்மையில் அமைதியைத் தான் விரும்பினார். சென்ற ஆண்டு நவம்பரில் ரோமில் அவர் துருக்கியர்களுடன் பேச்சு நடத்த விரும்புவதாக அறிவித்தார். குர்தியர்களின் பண்பாட்டு உரிமைகள் உறுதி செய்யப்பட்டு, சிறைப்படுத்தப்பட்டுள்ள போராளிகள் விடுதலை செய்யப்பட்டு, குர்து இன அரசியல் கட்சிகள் அமைக்கும் உரிமை உறுதி செய்யப்படவேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

அப்துல்லா ஒசலானைப் பிடித்து சிறையிலிட்டுவிட்டதால் குர்திய மக்களின் தேசியப் போராட்டம் ஓய்ந்து விடப் போவதில்லை.

ஒசலானுக்கு மரண தண்டனை விதிக்கப்படும் வாய்ப்பு இருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன். உலகெங்கும் அமைதியையும் மனித உரிமைகளையும் நேசிக்கக் கூடியவர்கள் இப்படி நடக்கக் கூடாதென்று விரும்புகின்றார்கள். குர்திய மக்களோடு சேர்ந்து அவர்கள் கோருகின்றார்கள்

அப்துல்லா ஒசலானை விடுதலை செய்!

●●



படிப்பகம்

www.padippakam.com

# மேற்கு வங்க அரசும் டன்லப் தொழிற்சாலையும்

—திலீபா

தமிழ்நாட்டில் சென்னை அம்பத்தூரில் இருப்பது போலவே மேற்கு வங்கத்தில் சாகர்குஞ்ச் என்ற இடத்திலும் ஒரு டன்லப் தொழிற்சாலை இருக்கிறது. இரு ஆலைகளுமே ஓராண்டுக்கு மேலாக மூடப்பட்டுக்கிடக்கின்றன.

தொழிற்குழுமங்கள் தொடர்பான சட்டங்கள் அனைத்துமே நடுவணரசின் ஆட்சி எல்லைக்குட்பட்டவை என்பதால் டன்லப் தொழிற்சாலையை மீண்டும் திறப்பதற்குத் தங்களால் எதுவும் செய்ய இயலாதென்று மேற்கு வங்க மாநில தொழில்துறை அமைச்சர் திரு. மிருணாள் பானர்சி மாநில சட்டப் பேரவையில் தெரிவித்துள்ளார்.

சாகர்குஞ்ச் டன்லப் ஆலையில் வேலை செய்து வந்த 31 வயது தொழிலாளி பிரசெஞ்சித் சர்க்கார் வறுமைத் தாளாமல் தூக்கிட்டுத் தற்கொலை செய்துக் கொண்டது பற்றிய கவன ஈர்ப்புத் தீர்மானத்துக்கு விடையளிக்கும் போது அமைச்சர் இவ்வாறு விளக்கமளித்துள்ளார்.

"டன்லப் நிர்வாகம், குழுமங்கள் தொடர்பான சட்டத்தை மீறிக் கடுமையான ஒழுங்கீனங்களை செய்திருப்பதற்குச் சான்றுகள் இருந்த [illegible]பாதிலும், நடுவணரசு டன்லப் விவகாரத்தில் தலையிடவே இல்லை. 1997 டிசம்பர் வ[illegible]ர டன்லப் தொழிற் சாலையில் திர[illegible]ழப்பு ஏதும் இல்லை என்றாலும், நிலைத்த சொத்துகளை விற்கும் நோக்கத்துடன் தொழி[illegible]ற்சாலை நலிவுற்று விட்டதாக இயக்குநர் கு[illegible]வினர் 1998 சனவரி 1[illegible]இல் முடிவெடுத்த[illegible]ர். இதுவே அமைச்சர் கூறியது".

முதலமைச்சர் சோதிபாசு டன்லப் நிர்வாகத்தின் உள் நோக்கங்கள் பற்றி சந்தேகம் இருப்பதாகக்கூறி, நிதி ஒழுங்கீனங்கள் பற்றிய குற்றச் சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்தும்படி நடுவணரசின் நிதித்துறை அமைச்சரை வற்புறுத்தியுள்ளார்.

இதிலிருந்து தெரிவது என்ன? நியாமமற்ற காரணங்களுக்காக மூடப்பட்ட ஒரு தொழிற்சாலையை மீண்டும் திறக்கிற அதிகாரம் கூட மாநில அரசுக்கு இல்லை – அது தமிழக தி.மு.க அரசானாலும் சரி, மேற்கு வங்க இடதுசாரி அரசானாலும் சரி. பிறகெதற்கு இந்த அரசுகளில் உட்கார்ந்து இருக்கைகளைத் தேய்க்க வேண்டும்? அநியாயத்தைத் தடுத்து நிறுத்த முடியாமல், அநியாயம் நடக்கிறது என்று புலம்புவதற்கு அரசும் அமைச்சர் பதவியும் தேவைதானா?

ஏப்பிரல் : 14 அம்பேத்கர் பிறந்தநாள்

## ஆணை

பார்ப்பனியத்தின் தோலுரித்து, சனாதனிகளின் முகம் கிழித்து, ஒடுக்கப்பட்ட மக்களுக்காய் வாழ்நாள் முழுமையும் போராடிய சமூகப் போராளி **அம்பேத்கர்** பிறந்த நாளில் ஆதிக்கச் சாதியினரின் சூழ்ச்சிகளை அம்பலப்படுத்துவோம்! ஒடுக்கப்பட்ட மக்களுக்காய் போராடுவோம்!



படிப்பகம்

www.padippakam.com

# கொசவோவும் தமிழீழமும்

யூகோஸ்லாவியா உடைந்து சிதறி அதில் அடங்கிய குடியரசுகள் தனித்தனியாக் பிரிந்துபோன பிறகும் சில பகுதிகளில் சிக்கல் தீர்ந்தபாடில்லை. இதற்கான முதன்மைக் காரணமாய் இருப்பது செர்பியர்களின் பேரினவாதமே. செர்பியர்களின் ஆதிக்கத்தில் ஒரு மாநிலமாக இருந்துவரும் கொசவோவில் அல்பேனிய இனத்தவர்களே 90 விழுக்காடு அளவிற்குப் பெரும்பான்மை ஆவார்கள். ஆனால் அவர்களின் சுயநிர்ணய உரிமையை மதிக்கவும் ஏற்கவும் செர்பிய அரசு பிடிவாதமாக மறுத்து வருகிறது. வேறு வழியின்றி கொசவோவைச் சேர்ந்த அல்பேனியர்கள் இனப் படுகொலை யிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள ஆயுதமேந்திப் போராடி வருகிறார்கள்.

கொசவோ தொடர்பான அமைதிப் பேச்சுவார்த்தை பாரிசில் நடந்து கொண்டிருக்கிறது. பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கும் போதே செர்பிய இராணுவம் கொசவோவில் கடும்தாக்குதல் தொடுத்துள்ளது. ஒரு கிராமத்திலிருந்து சுமார் 7,000 அல்பேனிய இனத்தவர்கள் வெளியேறிச் சென்றதை உலகச் செய்தி நிறுவனங்கள் எல்லாம் அறிவித்துள்ளன.

செர்பிய ஆதிக்கத்திலுள்ள யூகோசுலாவிய அரசு (தலைநகர் பெல்கிரேடு) அல்பேனியர்களுக்கு எதிராகப் படை நடத்துவது குறித்து அமெரிக்க அரசு கவலை தெரிவித்துள்ளது. பாரீசு பேச்சு வார்த்தையில் முதன்மை மேற்பார்வை யாளாராக இருப்பவர் அமெரிக்கத் தூதுவர். பிரான்சு, பிரிட்டன் ஆகிய நாடுகளின் அயல் துறை அமைச்சர்கள் அமைதி மாநாட்டின் கூட்டுத் தலைவர்களாகச் செயல்படுகிறார்கள்.

கொசவோவுக்குத் தன்னாட்சி வழங்கும் திட்டத்தை யூகோசுலாவியா ஏற்றுக் கெள்ள வேண்டுமென மேலைநாடுகள் வலியுறுத்தின. இல்லையேல் நேட்டோ போர் விமானங்களைக் கொண்டு தாக்குதல் நடத்தப் போவதாக அவை மிரட்டின. தன்னாட்சித் திட்டத்தை அல்பேனியர்கள் ஏற்றுக்கொண்ட போதிலும் செர்பியர்கள் ஏற்க மறுத்து வருகின்றனர். நேட்டோவின் அமைதி உடன்பாட்டை ஏற்கச் செய்வதற்காக யுகோஸ்லாவியா மீது கடும் விமானத் தாக்குதலை, நேட்டோ நாடுகள் தொடுத்துள்ளனர்.

கொசவோவில் செர்பியர்கள் என்ன செய்கிறார்களோ, அதையேதான் தமிழீழத் தில் சிங்களப் பேரினவாதிகள் செய்து வருகிறார்கள். இதுவரை கொசவோவி லிருந்து வெளியேறிய 1,18,000 அல்பேனியர்கள் அகதிகளாய் அண்டை நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். ஆனால், சிங்கள பேரினவாத அரசு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போது சுமார் 5,00,000 தமிழர்கள் அண்டை நாடுகளுக்குச் செல்ல இயலாதவாறு தடுத்த காரணத்தால் சொந்த நாட்டிலேயே வன்னிக்காடுகளுக்குள் அகதிகளாய் அலைந்து திரிந்தனர். கொசவோ பற்றிக் கவலை படுவது போல் தமிழீழம் பற்றி உலக நாடுகள் கவலைப்படும் நாள் எந்நாள்?

—தி.



படிப்பகம்

www.padippakam.com

# டான் பிரீனின்
# அயர்லாந்து விடுதலைக்கான எனது போராட்டம்

**கலைவேலு**

## 2. மோதலை நோக்கி...

1916ஆம் ஆண்டுக் கிளர்ச்சியையொட்டி நாடு கடத்தப்பட்டவர்கள் ஓராண்டு கழித்து நாடு திரும்பத் தொடங்கினார்கள். நாடெங்கும் புதிய எழுச்சி மீண்டும் பற்றிக் கொண்டது. கடந்த ஓராண்டு காலமாகத் திப்பநேரியில் நாங்கள் சிறு குழுவாக இயங்கியது மாறி, இயக்கம் நாடு முழுவதும் கால்கொள்ளத் தொடங்கியது.

அரசியல் தளத்தில் ரோஸ்காமன், லாங்போர்டு ஆகிய இரண்டு இடைத் தேர்தல்கள் நடைபெற்றன. அயர்லாந்து குடியரசுக்காய்க் குரல் கொடுப்பவர்களே இரண்டிலும் வெற்றி பெற்றனர். சில மாதம் கழித்து சின் பீன் தலைவர்களில் ஒருவரான ஈமன் டி வலேரா (Eamon de Valera), லெவஸ் (Leves) சிறையிலிருந்து விடுதலை பெற்று வெளிவந்தார்.

அப்பொழுது ஈஸ்ட் கிளேர் (East Clare) நாடாளுமன்றத் தொகுதிச் சிறு தேர்தல் நடைபெற இருந்தது. "அயர்லாந்து குடியரசே எங்கள் நோக்கம்", "இங்கிலாந்து நாடாளுமன்றத்தைப் புறக்கணிப்போம்" என்ற இரு முழக்கங்களோடு டி வலேரா அத்தேர்தலில் போட்டியிட்டார், மாபெரும் வெற்றியும் பெற்றார். திப்பநேரி நகரில் நடைபெற்ற மிகப் பெரிய வெற்றி விழாப் பொதுக் கூட்டத்தில் அவர் பேசினார். எங்களை வெளிக்காட்டிக் கொள்ள காத்திருந்த காலம் கனிந்தது.

ஆம்! இந்நிகழ்விற்குப் பின், குறுகிய காலத்திலேயே அயர்லாந்தின் குடியரசுத் தலைவராகத் தேர்தெடுக்கப்பட்ட ஈமன் டி வலேராவுக்கு நாங்கள் பாதுகாப்பு வீரர்களாய் அணிவகுத்து நின்றோம்.

அப்பொழுது திப்பநேரியில் ஆயிரத்துக்கு மேற்பட்ட இங்கிலாந்து பாதுகாப்புப் படைவீரர்கள் முகாமிட்டிருந்தனர். பாதுகாப்புப் படைமுகாம் நிழலில் தான் எங்கள் பொதுக்கூட்டமே நடைபெற்றுக் கொண்டிருந்தது. இதனால் துப்பாக்கி ஏந்திச் செல்வதைத் தவிர்த்தோம். மற்றபடி இங்கிலாந்து எவற்றையெல்லாம் கடுந்தண்டனைக்குரிய குற்றங்களாக அறிவித்திருந்ததோ அவற்றையெல்லாம் யாவருங்காண ஒளிவுமறைவின்றி நிகழ்த்திக் காட்டினோம். முதலாவதாக, படை வீரர்களாய் அணிவகுத்துச் செல்வது பெருங்குற்றம்; அதனினும் கடுங்குற்றம் சீருடை அணிந்து செல்வது. எல்லாவற்றிற்கும் மேலாக அப்பொழுதுதான் தனிச்சட்டம் மூலம். பொதுவிடங்களில் எடுத்துச் செல்லக்கூடாதென தடை விதிக்கப்பட்டிருந்த பந்தாட்ட வளைகோல்களை (Hurlegs) துப்பாக்கிகளுக்குப் பதிலாக ஏந்திச் சென்றோம்.

வளைகோல் பந்தாட்டம் என்பது. அயர்லாந்து மக்களின் தேசிய விளையாட்டு! இவ்விளையாட்டுக்குறிய வளைகோல்களின்



படிப்பகம்

www.padippakam.com

மீது தடை விதிக்கப்பட ஒரு நிகழ்வு காரணமாக அமைந்துவிட்டது. அது இப்படித்தான் நடந்தது. இங்கிலாந்துச் சிறைகளில் அடைக்கப்பட்ட அயர்லாந்துக் காரர்கள் நடத்தப்படும் முறைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஞாயிறு மாலைப் பொழுதொன்றில், டப்ளின் நகரில் பெரஸ் போர்டு பிளேஸ் (Beresford Place) என்ற இடத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கோமான் பிளங்கட் (Count Plunket) அவர்களும், கேதல் புரிகா (Cathal Brungha) அவர்களும் கலந்துகொண்டு உரையாற்றுவதாக இருந்தது. வளைகோல் பந்தாட்ட விளையாட்டிலிருந்து அப்பொழுதுதான் திரும்பியிருந்த இளைஞர்கள் பலர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். குடிமக்களின் அமைதியான இந்த எதிர்ப்புக் கூட்டத்தை நடைபெறா வண்ணம் தடுக்கத் திட்டமிட்டார் டப்ளின் நகரக் காவல்துறை ஆய்வாளர் மில்ஸ் (Mills). கூட்டத்ததைக் கலைத்துப் பேச்சாளர்களைத் தளைப்படுத்த முனைந்தார். கூட்டம் இம்முயற்சியை எதிர்த்து நின்றது. இதனால் ஏற்பட்ட கலவரத்தின் பொழுது வீசப்பட்ட வளைகோல் ஒன்று ஆய்வாளரைக் கடுமையாகத் தாக்கிவிட்டது. காயம்பட்ட ஆய்வாளர் அதனால் இறந்தும் போனார்.

இதனையடுத்தே அயர்லாந்துக்குப் பொறுப்பாயிருந்த இங்கிலாந்துப் படைத் தளபதி சர். பிரைன் மேகன் (Sir. Bryan Mahon) பொது இடங்களில் வளைகோலை எடுத்துச் செல்ல தடை விதித்தார். கைத்தடிக்கு தடை விதித்தால் எப்படியிருக்குமோ அப்படித்தான் இதுவும். நாகரீக அரசு என்று சொல்லிக்கொள்ளும் பிரித்தானிய அரசு இப்படியொரு தடையை விதித்ததற்கு வெட்கப்பட வேண்டும்! ஆனால் பின்னர் வளைகோல்களுக்கு வேலையே இல்லாத இடங்களுக்கெல்லாம் அவற்றை எடுத்துச் சென்று, அயர்லாந்து மக்கள் இத்தடைச் சட்டத்தைக் கேலிக் கூத்தாக்கியது வேறு கதை!.

திப்பநேரியில் இடம் பெற்ற எங்களுடைய இந்த முதல் படை அணிவகுப்பைக் கண்டு எதிரிகளைக் காட்டிலும் எங்களவரே மிகுந்த அதிர்ச்சிக்குள்ளாயினர். உள்ளூர் சின் பீன் கட்சியினரால் இதனைப் பொறுத்துக் கொள்ளவே முடியவில்லை. எந்தக் கூட்டமும் கூட்டப் பெறாமல்... கூட்டத்தில் எதுவும் முன்மொழியப்படாமல்... விவாதிக்கப் படாமல்... எந்தத் தீர்மானமும் நிறைவேற்றப் படாமல்... ஓ... இது ஏற்றுக்கொள்ளவே முடியாத அடாவடித்தனம் என்றனர். சின் பீன் கட்சிக்கு அதரவு பெருகிக் கொண்டிருந்த நேரம் அது. கட்சி ஆயிரக்கணக்கான உறுப்பினர்களால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. ஆனால் இவர்கள் அனைவருக்கும் "தீர்மானங்கள்" மட்டுமே வலிந்த போர்க்கருவிகள், வேறு எந்தக் கருவிகளையும் ஏந்த அவர்கள் அணியமாயில்லை. சின் பீன் கட்சியில் அரசியலுக்கு மட்டுமே அழுத்தம் கொடுக்கும் பிரிவினர் எங்களைக் கடுமையாகக் கடிந்து கொண்டனர். இத்தகைய கயவர்களால் பிற்காலத்தில் எங்களுக்குச் சிலபல தொல்லைகளும் நேரிட்டன. எல்லாவற்றையும் அமைதியாய்க் கேட்டுக் கொண்டோம், எங்களை நாங்களே எடையிட்டுக் கொண்டோம்.

பிரித்தானிய பேரரசின் சட்டம் நகரில் வெட்ட வெளியில் மீறப்பட்ட செய்தி உள்ளூர்க் காவலர்கள் மூலம் உரிய வழியில் தலைமையகத்திற்குச் சென்று சேர்ந்தது. குற்றவாளிகளை உடனே தளைப்படுத்தும்படி ஆணை பிறந்தது. எனக்கும் சீன் திரேசிக்கும் பேரரசின் சிறை விருந்தோம்பலைத் துய்க்க



படிப்பகம்

www.padippakam.com

விருப்பமில்லை. எனவே "ஓட்டம்" பிடித்தோம். காவலர்களுக்கு "டிமிக்கி" கொடுத்துவிட்டு ஒவ்வொரு நாளும் நம்பிக்கைக்குரிய ஒரு நண்பரின் வீடு என நகர்ந்து கொண்டிருந்தோம். ஆயினும் எங்கள் அயர்லாந்திலும் இரண்டகர்கள் (துரோகிகள்) இருக்கவே செய்தனர். எங்கள் மக்கள் அவர்களைப் "பீலர்கள்" (Peelers) என வெறுப்பாய் அழைத்தனர்.

19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரித்தானியப் பேரரசிற்கு உதவி செய்வதற்காக சர். இராபர்ட் பீல் என்பவரால் முடியரசிய அயர்லாந்துக் காவல் படை (Royal Irish Constabulary) அமைக்கப்பட்டது. வழக்கமான குற்றங்களைக் கண்டுபிடிக்கும் பணி இவர்களுடையதன்று. குற்றம் என்ற சொல் உணர்த்தும் குற்றங்களை பொதுவாக அயர்லாந்தில் நடைபெறுவதே இல்லை. இவர்களுடைய பணி அயர்லாந்து விடுதலைப் போராளிகளின் நடவடிக்கைகளை வேவு பார்த்து மேலிடத்திற்கு அறிவிப்பதே. அயர்லாந்து சமயக் குருமார்களின் சமயச் சொற்பொழிவுகளைப் பற்றிக்கூட இவர்கள் அறிக்கை தரவேண்டியிருந்ததாம். இக்காவற்படையில் ஏறத்தாழ பத்தாயிரம் பேர் இருந்தனர். போர்க்கருவிகளில் பயிற்சி அளிக்கப்பட்டு, துப்பாக்கி முதலான கருவிகளும் இவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தன. அயர்லாந்து தேசியக்கட்சிக் குடும்பங்களைச் (Irish Nationalist Families) சேர்ந்தவர்களே இப்படையில் பெரும்பாலும் இடம் பெற்றிருந்தனர். இவர்களின் உதவியின்றி அயர்லாந்து மக்களைப் பற்றியும், நாட்டைப் பற்றியும், வரலாற்றைப் பற்றியும் ஒன்றுமே அறியாத பிரித்தானியப் படையினரால் அயர்லாந்தில் ஓர் அணுவைக் கூட அசைத்திருக்க முடியாது. அந்துரோகக் கும்பலை நிறுவியவர் பீல். ஆதலால், பின்னர் காட்டிக் கொடுத்தவர்கள் அனைவருமே "பீலர்கள்" ஆனார்கள்.

பீலர்களால் சீன் இரேசி தளைப்படுத்தப்பட்டு, கார்க் (Cork) சிறைச் சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். கிளேர் (Clare) மாவட்டத்தைச் சேர்ந்த பிரென்னான் (Brennan), சகோதரர்களான ஆஸ்டின் (Austin), பேட்டி (Paddy), மைக்கேல் (Michael) ஆகியோரை சீன் இரேசி முதன் முதலாக அங்குதான் சந்தித்தார். இம்மூவரும் பின்னர் அயர்லாந்துக் குடியரசுப் படையின் புகழ்பெற்ற தென்பகுதி படைத் தளபதிகளாகத் திகழ்ந்தனர், சுதந்திர அரசுப் படையிலும் "(Free State Army) உயர்பதவி வகித்தனர். வெளியில் கிடைக்காத வாய்ப்பு இப்பொழுது இரேசிக்குச் சிறைச்சாலையில் கிடைத்தது. கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ளும் வாய்ப்பு. எதிர்காலத் திட்டங்கள் பற்றி விவாதித்தனர். படைப் பயிற்சிகளைக் கூட சிறைக்குள்ளேயே மேற்கொண்டனர். வெடி பொருட்களைக் கையாளுவதில் வெளியே பெற முடியாத பயிற்சிகளை உள்ளே பெற்றனர். சிறைச்சாலை "புரட்சியாளர்களின் பல்கலைக் கழகமாய்" மாறிப் போயிற்று.

இராணுவ நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்றது. சீன் இரேசிக்கு இரண்டாண்டுத் தண்டனை விதிக்கப்பட்டு, பின்னர் எட்டு மாதங்களாகக் குறைக்கப்பட்டது. பொதுவாகவே பிரித்தானிய நீதி மன்றங்கள் எதிலும் நாங்கள் எதிர்த்து வழக்காடுவதே இல்லை. எங்களை விசாரிக்கும் உரிமை அவர்களுக்கு இல்லை என்பதில் நாங்கள் உறுதியாக இருந்தோம். பல நேரம் விசாரணையையே நாங்கள் நகைச்சுவை நாடகமாக்கி விடுவதுண்டு. சாட்சிகளின் விசாரணையின் பொழுது ஏதேனும்



படிப்பகம்

www.padippakam.com

செய்திருந்தால் ஒன்றை உரக்கப் படித்துக் கொண்டிருப்போம்.. இல்லையென்றால் ஏதேனும் பாட்டுப் பாடிக் கொண்டிருப்போம்.

சிறைக்குள்ளே சீன் திரேசியும், நண்பர்களும் பட்டினிப் போராட்டமும் நடத்த வேண்டி நேர்ந்தது. தாங்கள் நடத்தப்படும் முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே தோழர்கள் இந்தப் போராட்டத்தைத் தொடங்கினர். அயர்லாந்து அரசியல் கைதிகள் பட்டினியை ஒரு கருவியாகக் கையிலெடுத்தது இதுவே முதல் முறை! தோழர்கள் அனைவருமே டப்ளின் நகரில் அமைந்திருந்த மவுண்ட் ஜாய் சிறைச்சாலைக்கு (Mount Joy Prison) மாற்றப்பட்டார். அங்கும் பட்டினிப்போராட்டம் தொடர்ந்தது, அந்தத் துயரம் நிகழும் வரை!

1916 கிளர்ச்சியின் வெற்றிகரமான தாக்குதலொன்றிற்கு பொறுப்பேற்ற தளபதி டாம் ஏஷ் (Tom Ashe) பட்டினிப்போராட்டத்தில் இறந்து போனார். சிறை மருத்துவர்களும் அதிகாரிகளும் வலுக்கட்டாயமாக உணவைத் திணிக்கச் செய்த முயற்சிதான் அவரது சாவில் முடிந்தது. ஏஷின் இந்த மரணம் அயர்லாந்து முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இலட்சியத்துக்காக உயிரிழக்க அயர்லந்து இளைஞர்கள் தயங்கமாட்டார்கள் என்ற உண்மையை இந்நிகழ்வு பிரித்தானியர் கன்னத்தில் ஓங்கி அறைந்து உணர்த்தியது. பிரிட்டன் பணிந்து வந்தது. அயர்லாந்துக் கைதிகளை போர்ச் சிறையாளர்களாகவோ அல்லது அரசியல் சிறையாளர்களாகவோ நடத்துவது என ஒத்துக் கொண்டது. இனி வலிந்து எவருக்கும் உணவைத் திணிப்பு இல்லை என்றும் உறுதி அளித்தது.

சீன் திரேசியும் அவருடைய தோழர்களும் பின்னர் டண்டாக் (Duntalk) சிறைக்கு அனுப்பப்பட்டார்கள். அங்கு சென்ற சில நாட்களிலேயே பிரித்தானிய அரசு மீண்டும் தன் பரம்பரைக் குணத்தை காட்டியது. சீனும் தோழர்களும் குற்றவாளிகளைப் போல் இழிவாக நடத்தப்பட்டனர். மீண்டும் பட்டினிப் போர் தொடங்கியது. இம்முறை பட்டினிப் போராட்டம் சீன் திரேசிக்கும் தோழர்களுக்கும் விடுதலை பெற்றுத் தந்தது.

சீன் திரேசி உள்ளே இருக்கும் பொழுது வெளியே நான் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தேன். திப்பரேரியின் சுற்று வட்டாரங்களில் எல்லாம் தொண்டர் குழுக்கள் அமைத்து பயிற்சி அளித்து வந்தேன். எல்லாம் சுமுகமாகத்தான் நடைபெற்று வந்தன. அவ்வப்பொழுது ஒரு சிலர் பிரித்தானியப் படையிடம் அகப்பட்டுக் கொள்வதுமுண்டு. சீன் திரேசி விடுதலையாகி வந்ததும்... புதுப்புதுப் பயிற்சி பெற்றது போதும். வெளிப்படையாய்ப் போர் முழக்கம் செய்வோமென அறைகூவல் விடுத்தார். தளைப்படுத்துவதெனில் அயர்லாந்து இளைஞர்கள் அனைவரையும் தளைப்படுத்தட்டும் என்றார்.

1918இன் முற்பகுதி... அயர்லாந்தில் விளையாட்டுத் துப்பாக்கிக் குண்டுகளுக்குக் கூட பிரிட்டனிடம் அனுமதி பெற வேண்டும் என்ற நிலை பழங்கதை ஆயிற்று. பெயர் குறிப்பிட முடியாத பல முனைகளிலிருந்தும் வரத் தொடங்கிய போர்க்கருவிகள், எங்கள் கருவிக்களஞ்சியத்தை நிரப்பிக் கொண்டிருந்தன. மீண்டுமொரு கிளர்ச்சிக்கான சலசலப்புகளைப் பகைவன் உணரத் தொடங்கினான்.

மீண்டும் சந்திப்போம்



படிப்பகம்

www.padippakam.com

## ஆலை ரொம்ப பெரிது வேலைவாய்ப்போ சிறிது

சென்னைக்கு அருகிலுள்ள மறைமலைநகரில் பன்னாட்டுக் குழுமமாகிய அமெரிக்க போர்டு நிறுவனத்தின் இந்தியப் பிரிவு அதன் புதிய சீருந்து (கார்) தொழிற் சாலையைத் திறந்துள்ளது. ஆடம்பரமான திறப்பு விழாவில் தமிழக முதல்வர் சிரித்த முகத்துடன் ஆலையின் இயக்கத்தைத் தொடக்கி வைத்துள்ளார். முன்னாள் தொழில்துறை அமைச்சர் முரசொலி மாறன் அகமகிழ முகமகிழ அருகில் நின்றுள்ளார். இந்தப் புதிய ஆலையில் உற்பத்தியாகப் போகும் சீருந்துக்கு சி-195 என்று குறியீட்டுப் பெயர் தரப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 20,000 முதல் 25,000 சீருந்துகள் இந்த ஆலையில் கோத்திணைக்கப் பட்டு வெளியே வரும். முழு அளவில் வேலை செய்யும் போது இந்த ஆலையில் ஆண்டொன்றுக்கு இலட்சம் ஊர்திகள் உற்பத்தி செய்யப்படும். இப்போது போர்டு நிறுவனத்தின் நாசிக் ஆலையிலிருந்து வெளிவரும் போர்டு எஸ்கார்ட் சீருந்தைக் காட்டிலும் புதிய சீருந்தின் விலை சற்றே குறைவாக இருக்கும்.

இந்த சென்னைத் தொழிற்சாலை 250 ஏக்கர் பரப்புள்ள வளாகத்தில் இடம் பெற்றுள்ளது. தமிழக அரசு இந்தத் தொழிற்சாலைக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் தாராளமாக செய்து கொடுத்துள்ளது.

புதிய போர்டு தொழிற்சாலை பற்றி மேற்கண்ட விவரங்களையெல்லாம் தொகுத்துக் கொடுத்திருக்கும் இந்து நாளேட்டின் தனிநிருபர் கடைசியாக கொடுத்துள்ள ஒரு புள்ளி விவரம் எல்லாவற்றையும் விட முக்கியமானது. என்னவென்றால் தேர்ச்சியும் பயிற்சியும் பெற்ற 600 தொழிலாளர்களுக்கு மட்டுமே இந்த தொழிற்சாலையில் வேலை கிடைக்கிறது.

250 ஏக்கர் பரப்பில் அமைந்து ஆண்டுக்கு இலட்சம் சீருந்துகள் உற்பத்தி செய்யக் கூடிய ஆலையில் தேர்ச்சி பெற்ற 600 தொழிலாளர்களுக்கு மட்டுமே வேலை!, பன்னாட்டுக் குழுமங்களை அழைத்து வந்து பற்பல சலுகையும் வாரி வழங்கி வேலையில்லாத் திண்டாட்டத்தை விரட்டப் போவதாக யார் சொன்னது?

– தி.

●●

## தெற்காசியாவின் முதல் ஐரோப்பிய தேசம்

தமிழீழம் விரைவில் விடுதலை பெறும் என்ற நம்பிக்கை உலகெங்கும் தமிழர்களிடையே வளர்ந்துள்ளது. புதிய தமிழீழத் தேசத்தில் உள் கட்டுமானம் குறித்து அவர்கள் இப்போதே சிந்தித்து திட்டம் தீட்டி வருகிறார்கள். தமிழீழ விடுதலை என்பது தெற்காசியாவில் வரலாற்று வழிப்பட்ட சோசலிசப் புரட்சியின் தொடக்கமாக அமையும் என்பது நம் உறுதியான நம்பிக்கை.

சில நாடுகள் புவியியல் வகையில் ஒரு கண்டத்தைச் சேர்ந்தவையாக இருந்தாலும் அரசியல் அல்லது பொருளியல் வகையில் வேறு கண்டத்தைச் சேர்ந்தவையாகக் கருதப்படும். கீழ்த்திசை நாடாகிய சப்பான் பொருளியல் வகையில் மேலை நாடாகக் கருதப்படுகிறது. புவியியல் வகையில் ஆப்பிரிக்க நாடாகிய எகிப்து அரசியல் வகையில் ஆசிய நாடாகக் கொள்ளப்படுகிறது. கிழக்கு ஐரோப்பா என்பது பெரும்பாலும் ஆசியாவின் நீட்சிதான்.

மலரப் போகும் தமிழீழம் தெற்காசியாவின் முதல் ஐரோப்பிய தேசமாகத் திகழும் என்பது உறுதி.

– ஈழத் தமிழர் ஆதரவு எழுச்சி மாநாட்டில் (மதுரை, 7.3.99) தோழர் தியாகு

●●



படிப்பகம்

www.padippakam.com

# மத அடிப்படைவாதமும், பெண்களும்

பெண்கள் தம் உரிமைகளைக் காக்க, இயக்கங்களாய் மாறி வருகின்ற நல்ல போக்கினை உலகம் எங்கும் பார்க்கிறோம். கலாச்சாரம், கலாச்சாரப் பாதுகாப்பு என்ற பெயரில் சமூகத்தின் சரிபாதியை இனி ஒடுக்கிவிட முடியாது என்ற கருத்து ஓங்கி ஒலிக்கின்ற போதே, மதவாதம், மதவாதிகளால் திட்டமிட்டு தூண்டப்பெற்று, இயக்கப் போக்குகள் மழுங்கடிக்கப்பட்டு வருதலையும் காண்கிறோம். 1993இல் மும்பையில் நடந்த மதக் கலவரங்களில், பெண்கள் கொடுமையாகத் தாக்கப்பட்ட போது, பெண்ணியச் சங்கங்கள், மத ரீதியாகப் பிளவு பட்டு, பெண்களே பெண்களுக்கு எதிரிகளாக்கப் பட்டது அண்மை வரலாறு, எனவே, பெண்ணுரிமை இயக்கங்கள், வளர்ந்து வரும் வகுப்புவாத, மதவாத போக்குகள், தம்மை எப்படியெல்லாம் பாதிக்கப்போகின்றன என்பதில் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுவது கட்டாயமாகிறது.

வகுப்புவாதம் ஒரு கருத்தியல் என்ற அடிப்படையில் மதத்தைச் சுற்றி எழுப்பப் பெறும்போது மதம் வகுப்புவாதமாகிறது. மக்களின் இனம், மொழி, பண்பாடு என்ற அடையாளங்கள் மறுக்கப்பட்டு மதம் மட்டுமே மக்களை இணைக்கும் சக்தி என்று நம்ப வைப்பதால், மதமே மக்களின் பண்பாடாகிறது, அரசியலாகிறது. ஏன்? தேசமே மதத்தின் பெயரால்தான் அடையாளப்படுத்தப்படுகிறது.

மத அடிப்படையிலான மக்கள ஒருங்கிணைப்பு காலத்தின் தேவையறிந்து, மத மறுமலர்ச்சிக்கு இட்டுச் செல்லுமானால், குறிப் பிட்ட மதத்தின் உரிமையை யாரும் கேள்வி கேட்க இயலாது. ஆனால், மத அடிப்படையில் மக்கள் வெறியூட்டி ஒருங்கிணைத்து, மாற்றத்தை மறுத்து, எக்காலத்தும் அழியாத உண்மைகள் தம் மதத்துள்ளேதான் இருக்கின்றன என்று கூறி பழமைக்கு மீண்டும் செல்வோம் என்ற முழக்கத்துடன் செய்யப்பெறும் மத மீட்சி பற்றி யாரும் கவலை கொள்ளாதிருக்க இயலாது. இம்மத மீட்சி என்பதுதான் மத அடிப்படைவாதமாகிறது. மத அடிப்படைவாதம் மதத்தை மையப்படுத்திய ஒன்று என்று யாரும் கருதிவிடக் கூடாது. மதத்தின் பேரால் செய்யப் பெற்றாலும் இதன் இறுதி இலக்கு அரசியல்தான். ஆக மத அடிப்படைவாதத்தின் பேரால், சாதாரண எளிய மக்களின் மத நம்பிக்கைகளும் கொச்சைப் படுத்தப்பட்டு, ஒரு சிலரின் அரசியல் லாபத்திற்காக செய்யப்படும் நாடகமே என்பதனையும் புரிந்து கொள்ள வேண்டும். அரசியல் இல்லையென்றால் மத அடிப்படைவாதம் இல்லை என்பதில் தெளிவு கொள்ளவேண்டும். மதத்தின் அடிப்படையில் மக்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, சனநாயகம் தரும் வாக்குரிமையின் அடிப்படையில், அம்மதப் பெரும்பான்மை ஆட்சிக்கு வருகின்றபோது, அவ்வாட்சி மதஞ்சார்ந்த ஆட்சியாகத்தானே இருக்க முடியும். அவ்வாட்சியின் கோட்பாடுகள், அம்மதக் கோட்பாடுகளாகத்தானே இருக்க முடியும். மத அடிப்படையில் மக்களை ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்ட பாகிஸ்தான் "இசுலாமியக் குடியரசானது" இந்தியாவில் நிகழுமானால் அது "இந்துராஷ்டிமாகும்" என்பதே உண்மையாகும்.

## என்ன செய்யும்?

மத அடிப்படைவாதம் மதக் கோட்பாடுகள் அனாதியானவை, மாறாதவை, வழுவற்றவை என்று நம்ப வைப்பது. நவீன சிந்தனைகளையும், விமர்சனக் கண்ணோட்டத்தையும் மறுப்பது, இக்கோட்பாடுகளை ஏற்றுக் கொள்ளாதவர்களை



படிப்பகம்

www.padippakam.com

துரோகிகளாகக் காட்டுவதோடு, கொலைத் தண்டனைக்கும் சித்திரவதைக்கும் உள்ளாக்குவது. அறிவியலறிஞர் கலிலியோ, கிறிஸ்துவ மதவாதிகளால் தண்டிக்கப்பட்டதும், அண்மையில் தஸ்லீமா நஸ்ரீனுக்கும், சல்மான் ருஷ்டிக்கும் வங்கதேச அரசும் ஈரான் அரசும் பிறப்பித்திருக்கும் கொலைத் தண்டனையயும், எடுத்துக்காட்டாகக் கூறலாம். மதத்தின் அப்பழுக்கற்ற கோட்பாடுகளே, ஒரு நாட்டின் ஆட்சி முறைமையும், பொருளாதாரத் திட்டங்களையும் பண்பாட்டுப் பாரம்பரியத்தையும் நிர்ணயிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. ஆக மத அடிப்படைவாதம் மத எல்லையைத் தாண்டி, மத சார்பற்ற அனைத்துத் துறைகளையும் ஊடுருவிநிற்கிறது.

வரலாற்றைப் புரட்டிப் பார்ப்போமானால் மத அடிப்படைவாதம், பெரும்பான்மை என்ற அடிப்படையில் செய்யப்பட்டாலும், பெரும்பான்மைப் பிரிவினருள் ஆதிக்கவுணர்வுள்ள ஒரு சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாக்கும் அரசியல் அதிகாரக் கருவியாகவே இருந்து வந்துள்ளது என்ற உண்மை தெரியவரும். புராணக் கதைகளும், வரலாற்றுத் திரிபும் இவர்களின் யுக்திகள். வன்முறையை நியாயப் படுத்தி, மதச் சிறுபான்மையினரை ஓரங்கட்டுகிறது. மூடநம்பிக்கைகளையும், சகிப்பற்ற தன்மையையும் வளர்க்கிறது. அதிகார வர்க்கத்தின் சுயநலத்திற்கு மதத்தை சேவகனாக மாற்றுவதோடு, நீதியற்ற சமூக அமைப்புகளை நியாயப்படுத்தி, மக்களின் போர்க்குணத்தை மழுங்கடிக்கிறது. சுருங்கச் சொன்னால், மாற்றத்திற்கு, அறிவியல் கண்ணோட் டத்திற்கு எதிரானது, ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கு எதிரானது, பெரும்பான்மை என்ற பெயரில் மக்களை வெறியூட்டி அரசியல் அதிகாரம் கைப்பற்றப்படுகின்ற போது, பலியாக்கப்படுவது சனநாயகம், சமத்துவம், மதச்சார்பின்மை.

## பெண்களுக்கு?

மத அடிப்படைவாதம் மேல்தட்டு மக்களின் அரசியல் அதிகாரக் கருவி என்ற நிலையில், நலிந்த பிரிவினரை எப்போதுமே கண்டு கொள்ளாததோடு, இவர்கள் உரிமை கேட்டு போராடுகின்ற போதெல்லாம் வன்முறையை ஏவிவிட்டு அடக்கி வந்துள்ளது என்பதுதான் உண்மை. அதுவும் குறிப்பாக நலிந்த பிரிவினருள் பெரும்பான்மையினரான பெண்களுக்கு என்ன செய்து வந்துள்ளது என்பதற்கு எடுத்துக்காட் டுகள் தேவையில்லை. இப்பாசிசக் கோட்பாடு, எப்போதுமே பண்பாடு, பழம்பெருமை, பாரம்பரியம், வரலாறு என்ற தளங்களை மையப்படுத்தி வளர்க்கப் பெறுகின்றபோது, பெண்கள்தான் முதல் பலிகடாக்களாக்கப்படுகின்றனர்.

மதமும், அரசியலும் பின்னிப் பிணைவதால் பெண்களுக்கு இழைக்கப் பெறும் பெரிய வன்முறைகளுக்கு ஆப்கனில் தலிபனை எடுத்துக்காட்டாகக் கூறலாம். மதம், பண்பாடு என்ற பெயரில் இடம்பெறும் பட்வாக்கள், சொந்த மதஞ்சார்ந்த பெண்கள் மீது நிகழ்த்தப் பெறும் பாலியல் பலாத்காரம், பெண்களைக் கடத்திச் செல்லுதல் என்பன அன்றாட நிகழ்வுகள். இந்நாட் டின் பெண்ணுரிமை காக்க தீரத்தோடு போராடிய மீனா கேஷ்வர்கமல் கொலை செய்யப்பட்ட கொடூரம், இன்று ஆப்கனில் 10 வயதுக்கு மேற் பட்ட பெண்களில், ஏதாவது ஒரு வகை பலாத்காரத்துக்கு உட்படாத பெண்களே இல்லை என்கின்றனர். தன் மகளுக்கு கல்வி கொடுத்தார் என்பதானாலேயே மகள் முன் தந்தை கொலை செய்யப்படுகிறார். கல்விக் கூடாரங்களை நரகத்தின் வாயில்கள் என்றும், வானொலிப் பெட் டியை சாத்தானின் பெட்டிகள் என்றும் தொலைக்காட்சியை சாத்தானின் கண்ணாடிகள் என்றும் வர்ணிக்கும் தலிபன் மதவாதக்கும்பல் நிகழ்த்தும் வன்முறைகளுக்கு வரையறையே



படிப்பகம்

www.padippakam.com

இல்லை. நவீன சிந்தனைகளோ, புற செய்திகளோ மக்களை எட்டி விடக்கூடாது என்பதில் மிக கவனமாக இருக்கும் இச்சக்திகள், பெண்கள் பர்தா அணியாமல் வெளியே செல்லக்கூடாது என்பதோடு, ஓர் ஆண் துணையின்றி வெளியே சென்றால் தண்டனை கொடுக்கிறது. நோய்வாய்ப்பட்டு அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய கட்டாய சூழலுக்கு உட்படுத்தப்படும் பெண்களுக்கு சிகிச்சை செய்யும் மருத்துவரோடு, துணையாக ஓர் ஆணும் இருக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறது. ஆப்கானின் தலிபன் மட்டுமல்ல, இசுலாமியக் கோட்பாடுகளின் அடிப்படையில் ஆட்சி நடைபெறும் பல நாடுகளில் பெண்கள் பொது வாழ்க்கையில், அரசியலில் ஈடுபட உரிமையில்லை, வாக்குரிமையும் இல்லை. பாகிசுதானில் பெண்ணுரிமை பெரிதும் கட்டுப்படுத்தபட்டுள்ளது.. சியாவின் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட "ஹதூத்" ஆணையின்படி ஒரு ஆணின் சாட்சிக்கு இரு பெண்கள் சமம், பாலியல் பலாத்காரத்திற்கு ஆளாக்கப்பட்ட பெண்ணால் குற்றத்தை நிரூபிக்க இயலவில்லையென்றால் ஒழுக்கம் கெட்ட நடவடிக்கைக்காக அவள் தண்டிக்கப்படுவாள்.

## இந்தியாவில் என்ன நடக்கும்?

"குடும்பமே இந்துச் சமூகத்தின் முதன்மை மையம்; இக்குடும்பத்தின் மையம் பெண்கள். பெண்கள் குழந்தைகளை வளர்ப்பதும், அவர்கள் முன்னேற்றத்திற்கு வழி செய்வதும்தான் இந்து தேசத்திற்கு அழகு தருவது".

"பெண்கள் கல்வி கற்கலாம். ஆனால், வேலைக்குச் செல்தல் முக்கியமல்லை; குடும்பத்தைப் புறக்கணித்து வேலைக்குச் செல்லக்கூடாது. பெண்கள் கணவனின் சம்பளத்தில் குடும்பத்தை நடத்த பழகிக் கொள்ள வேண்டும். பெண்கள் குடும்பத்தின் சூழ்நிலைக்கு ஏற்ப அனுசரித்து வாழவேண்டும். பெண்கள் வீட்டில் சீதையாகவும், வெளியே செல்லும் போது ஆபத்து நேர்ந்தால் துர்க்கையாகவும் மாற வேண்டும்". (தி வீக் - சனவரி 24, 1999)

சங்க பரிவாரங்களின் தலைமை அமைப்பாகிய ஆர்.எஸ்.எஸ்ஸின், பெண்கள் பிரிவாகிய ராஷ்டிரிய சேவிகா சமிதி பற்றிய கட்டுரையில் இப்பிரிவின் தலைவியாகிய லட்சுமிபாய் கேல்களின் கருத்துக்களே இவைகள்.

"இந்துத்துவா" வை தேர்தல் பிரகடனமாக வைத்து, ஆட்சியேறிய பாரதிய சனதா, கூட்டணி ஆட்சியென்பதால்தான் தன் கொள்கைகளை செயற்படுத்தவில்லையென்று வெளிப்படையாகவே சொல்லி வருகிறது. இவர்கள் முழுபலம் பெற்று ஆட்சிக்கு வருவார்கள் என்றால் பெண்கள் அமைப்புகள் என்ன செய்யப்போகின்றன. பெண்ணடிமைத்தனத்தை நியாயப்படுத்திச் சட்டமாக்கிய மனுவை உலகின் தலை சிறந்த சட்ட வல்லுநர் என்று போற்றுகிறார், கோல்வால்க்கர். அழியாத மாறாத தன்மையுடைய சனாதன தர்மம் போற்றப்பட வேண்டும் என்கின்றனர். சனாதனக் காவலர்களான சங்கராச்சாரியார்கள், பெண்களை தரிசு நிலங்கள் என்று அழைக்கின்றனர். வயது வந்த பெண்கள் சர்வ சகசமாக ஆண்களுடன் சேர்ந்து உத்தியோகம் பார்ப்பது நம் தேச ஆசாரத்துக்கு விரோதமானது, என்பது ஆச்சாரியார் வாக்கு. ஏப் கந்வரின் சதியை நியாயப்படுத்தி[illegible]ார். [illegible] [illegible]ராச்சாரியாரும், பாரதீ[illegible] சனதா[illegible] [illegible]து [illegible]த்[illegible] [illegible]வர் விசயராஜ்ய சிந்தியாவும் [illegible] [illegible]ளின் இன்னொரு கொள்கையான பொது [illegible]வில் சட்டமும் கூட, சிறுபான்மை சமூகத்தினரின் குடும்ப நலச்சட்டங்களை ரத்து செய்து விட்டு, இந்தியக் கலாச்சார அடிப்படையிலான பொது குடும்ப நலச் சட்டத்தை கொண்டு வர வேண்டும் என்பதுதான் இவர்கள் நோக்கம். பாரதிய சனதா ஆட்சி செய்த எந்த மாநிலத்திலும் இந்துப் பெண்களுக்குப்



படிப்பகம்

www.padippakam.com

பூர்வீகச் சொத்தில் சம உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. பொருளாதார, அரசியல், சமுதாயப் புலங்களில் நீதிக்காகப் பெண்கள் நடத்தும் போராட்டங்களை மேற்கத்திய கோட்பாடுகள் என கொச்சைப்படுத்தப்படுகின்றன.

"வேதத்திற்குத் திரும்புதல்" என்ற சித்தாந்த நடைமுறைப்படுத்துகையில், வர்ணாசிரம தர்மம் உயிர் பெறும். தர்மத்தின் ஆட்சியில் தாழ்த்தப்பட்ட சாதிப் பெண்களின் நிலை என்ன? பன்மைத் தன்மையுடைய இந்து மதம் சார்ந்த பெண்களின் பல பிரிவுகளிடையே உள்ள அடிப்படையான பண்பாட்டு வேறுபாடுகளை மறுத்து, பார்ப்பனியமே இந்துக் பண்பாடாகின்ற போது, பெண்ணுரிமைகள் என்னவாகும்? வேறு மதத்தால் நியாயப்படுத்தப்பட்டு, பாலிய விவாகம், விதவையர் திருமண மறுப்பு, சாதி போன்ற மூடப்பழக்க வழக்கங்களை அரசு சட்டத்தால் தடை செய்ததை, அரசு மதத்தில் தலையிடுகிறது என்று எதிர்த்த இச்சக்திகள், இன்று குடும்ப அமைதிக் குறைவுபட அரசு கொண்டு வந்த பெண்களுக் கான சட்டங்களே காரணம் என்றவர்கள், இந்து அரசில் என்ன செய்வார்கள்? அண்மையில் அறிமுகப்படுத்தவிருந்த இந்துத்துவக் கல்வி, பெண்களுக்கு எட்டாம் வகுப்பிற்குப் பிறகு வீட்டை நிர்வகித்தல் கட்டாயப்பாடமாக ஆக்க வேண்டும் என்கிறது. ஆர்.எஸ்.ஸின் அமைப்பில் பெண்களுக்கு இடம் கிடையாது என்பது எத்தனை பேருக்குத் தெரியும்.

பெண்ணுரிமை அமைப்புகளும் இயக்கங்களும் மிக விழிப்புடன் இருக்க வேண்டிய காலகட்டமிது. வகுப்புவாதம் மூலம் உருவாக்கப் பெறும் மத அடிப்படை வாதம் கட்டி எழுப்புகின்ற அனைத்து அமைப்புகளையும் ஒரே நிமிடத்தில் தகர்த்து விடும் ஆற்றலுடையது. பொய்யான கொள்கையில், சுயநல நோக்கில் மதத்தின் பெயரால் செய்யப்படும் இப்போக்கில் பெண்கள் எளிதாக அடிமையாக்கப்படுவர் என்பதால் எச்சரிக்கை தேவை.

*நன்றி :- கங்காணி*

●●

## மகளிர் தினம் வந்தது! எப்படி?

கோபன்ஹேகனில் 1910ல் சோஷலிசப் பெண்களின் இரண்டாவது சர்வதேச மாநாடு கிளாரா செட்கின் தலைமையில் கூட்டப்பட்டது. இந்த மாநாட்டில் சனநாயக உரிமைகள், சமாதானம், தேசிய சுதந்திரம் ஆகியவற்றுக்காக உழைக்கும் பெண்கள் தினமொன்றை அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டது. அன்றிலிருந்து மார்ச்–8 அகில உலக உழைக்கும் மகளிர் தினமாகக் கடைப்பிடிக்கப் படுகிறது. உழைக்கும் தினம் உருவாக காரணமாக இருந்தவர்கள் தொழிற் சாலைகளில் வேலை செய்த பெண்கள் அடுத்த 30 ஆண்டுகளில் தொழிற்சாலை வேலை மட்டுமல்ல, பெண்களின் வீட்டு வேலையும் உழைப்புதான் என்ற விழிப்புணர்ச்சி ஓரளவு பரவி இருக்கிறது.

*நன்றி :- கங்காணி*

●●



படிப்பகம்

www.padippakam.com

## நூல் அறிமுகம்

# நிசப்தம் - இளம்பிறை

# உனக்குப் பிறகான நாட்களில் - பச்சியப்பன்

வெளியீடு –

**பொன்னி**, 29, கண்ணகி தெரு, மடிப்பாக்கம், சென்னை –91.

ஒவ்வொன்றும் விலை ரூ. 25.00

1998–இல் நவம்பரில் ஒன்றும் டிசம்பரில் ஒன்றுமாய் அடுத்தடுத்து வெளியான இரண்டு கவிதைத் தொகுப்புகள். இளைய கவிஞர்களின் முதல் முயற்சி. படைத்தவர் ஒருவர் ஆண், ஒருவர் பெண் என்றாலும் படைப்புகள் பெரும்பாலும் ஒரே தளத்தில் பயணிக்கின்றன. சோகம்... சோகம்... சோகம். இருவருக்குமான வாழ்க்கைச் சோகங்களே விஞ்சி நிற்கின்றன. அவர்களின் படைப்புகள் சுயதரிசனத்திலிருந்து பிறந்தாலும் அவற்றில் சமுதாய அவலங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பது பாராட்டத்தக்கது.

*நிஜமாயிருக்கிறேன்*
*முரணானவள் என*
*முகம் சுழிக்கிறார்கள்*

என்று இளம்பிறையும்,

*காதலை ஏற்காத வீட்டில்*
*என்ன இருக்கு*
*மேலும் பேச*
*போகாமல் விட்டாலாவது மிதமாகும்*
*இருநூத்தி நாப்பது ரூபாவும்*
*கொஞ்ச நஞ்ச பாசமும்*

என்று பச்சியப்பனும் இசைக்கும் சோக கீதங்களே தொகுப்புகளெங்கும் விரவிக்கிடக்கின்றன.

இந்தச் சோகங்கள் வாழ்க்கையில்பட்ட அடியில், வலியில் இருந்து பிறந்தவைதான். காயத்தில் வழியும் குருதியில் இருந்து பிறந்தவை தான். காயத்தில் வழியும் குருதியில் வெளிப்படும் வலி, கவித்துவத்துடன் ஆடம்பரமற்ற எளிய சொற்களில் அழகாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வலிகள் இந்த இரண்டு பேரின் சொந்த வாழ்க்கையில் இருந்து வந்தாலும் இந்தச் சமுதாயத்தில் பெரும்பாலானவர்க்குப் பொருந்தக் கூடியதே. இக்கவிதைகளை இன்றைய சமுதாய அவலத்தின்பதிவுகள் என்று சொல்லலாம். அவலங்களைப் பதிவு செய்வதோடு தங்கள் கடமை முடிந்ததாகக் கவிஞர்கள் எண்ணிவிடக் கூடாது.

நம்பிக்கைத் துளிகளை இளம்பிறை கவிதைகளில் எங்கும் காணமுடியவில்லை தொந்தரவு எனும் கவிதையில்,

*இருள் தேவை*
*பிடித்தமும் கூட தெரிந்தால்—*
*தூர உட்கார்ந்து ஒப்பாரி*
*பாடிச் செல்லுங்கள்*
*ஆறுதலாக இருக்கும்*

என்கிறார்.

தொடர்ந்து தாக்குதல்கள், கணவனால், இயக்கத்தால், பக்கத்து வீட்டுக்காரர்களால் இப்படி எங்கு நோக்கினும் குத்திக் கிழிக்கும் ஈட்டிகளே



படிப்பகம்

www.padippakam.com

இருந்தபோதும் அதைக் கண்டு பயந்து அலறி அடங்கி ஒடுங்கும் போக்கு தான் தெரிகிறதே தவிர, உதறி எழுந்து நெஞ்சுயர்த்தி முஷ்டி மடக்கித் தயாராக வேண்டும் என்பதைக் கவிஞர் உணரவே இல்லை போலும்.

*பிரிவின் அதிர்வுகளைப்*
*பேசவும் பயந்து*
*அதட்டலால் அடங்கி*
*கண்ணீரோடு தாய்*
*நமக்கோ*
*நிலா நெடுந்தொலைவில்*
*இருக்கும் ஆதங்கம்*
*எப்பவும்.*

'இளம்பிறை, நிலா... நிலா அல்ல எனும் இந்த கவிதையின் மூலம் என்ன சொல்ல வருகிறார்?

தன் தேசம் அடிமைப்பட்டுக் கிடக்கிற போது, தன்னுடைய மக்களின் உரிமைகள் மறுக்கப்படும் பொழுது, சமூக அக்கறையுள்ள ஒருவன், தேசம் முழுவதையும் தன் வீடாகப் பார்க்கும் ஒருவனைத் தாய்பாசம் காட்டி கட்டிப்போட எண்ணுகிறாரா?

பெண்ணைப் பேச பெண்ணே எழு என்றார் கவிஞர் அறிவுமதி. எழும் ஒன்றிரண்டு பெண்களும் போர்க் குணமற்று சோகங்களைப் பதிவு செய்வதோடு நின்று விடுகிறார்கள்.

பச்சியப்பனின் இது உனக்கு மட்டுமா என் வயல் இதுதான் போன்ற ஒரு சில கவிதைகளில் மட்டுமே தன்னம்பிக்கையும் போராட்ட குணமும் தொனிக்கின்றன.

*எங்களுக்கான போரை*
*நாங்களே நடத்திக் கொள்கிறோம்*
*நீ எமக்கு*
*எதிரியாகவே இரு*

இப்படி அதிரடியாய்ப் பறைசாற்றிக் களம் இறங்குவதுதான் இந்த நாட்டில், இன்றைய சமுதாயத்தில் தேவையான ஒன்று.

கவிதைகள் ஒரு வரையறைக்குள் அடங்காதவைதான். அது இந்த அண்டம் முழுவதும் பற்றிப் படரும் ஒடித் திரியும் சுதந்திரம் உள்ளதுதான். அதற்குச் சட்டதிட்டங்களும் எல்லைக் கோடுகளும் வரைந்து அதற்குள் அடங்கச் சொல்வது அறிவீனம் என்பது உண்மைதான்.

ஆனாலும், புலம்பலை விட்டுவிட்டுப் போர்வாளை எடுக்க வேண்டிய வேளை இது என்பதைப் படைப்பாளிகளும் உணர வேண்டும்.

இக் கவிஞர்களின் முதல் முயற்சியே இத்தொகுப்புகள். இதில் தங்களுடைய வலிகளை அழுத்தமாகவும் அழகியலோடும் பதிவு செய்திருப்பதோடு நிறுத்திக் கொண்டுள்ளார்கள். இனி வரும் காலங்களில் போர்க் குணத்தோடும் புறப்படுவார்கள் என்று நம்புகிறோம்.

—அ. தமிழன்பன்

## மழைச்சந்தை

மேகத்தின் மழைக்கால்கள்
தரையில் சேறு குழைக்க
காய்கறிச் சந்தையில்
உலாவி வந்த கால்கள்
மண் சுமக்கும் தட்டுக்களானது!

பஞ்சாய்ப் பறக்கும்
பச்சைக் காய்கறிகள்
கூடைச்சன்னல் வழியே
பெருமழையை ரசித்தன!

பகலில் சுருக்குப்பை நிரப்பி
இரவில் இரப்பை நிரப்பும்
பெண்களெல்லமாம் இன்று
வெறுப்பை மட்டம்
மனதில் நிரப்பியிருந்தனர்!

சுடசுட மழையில்
காய்கறிக் கூடைகள்
குடையென மாறியும்
கன்னங்களில் வழிந்தன நீர்த்துளிகள்!

—கதிர் நிலவன்



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்ச் சான்றோர் பேரவையின் சாகும்வரை பட்டினிப் போரை ஆதரித்து தமிழ் தமிழர் இயக்கம் உள்ளிட்ட பல்வேறு இயக்கங்கள் ஒருங்கிணைத்த் போராட்டக் குழுவினரின் தமிழகம் தழுவிய அடையாளப் பட்டினிப் போர்



தமிழ் தமிழர் இயக்கம், தமிழர் தேசிய இயக்கம், தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி, தமிழ்நாடு மார்க்சிய லெனினியக் கட்சி, உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கம், தமிழகத் தமிழாசிரியர் கழகம், புரட்சிக் கவிஞர் பேரவை, பாவேந்தர் பேரவை, அறிவுக்கூடல் நடுவம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் இணைந்து நடத்திய அடையாளப் பட்டினிப் போரின் போது எடுத்த படம்.

"தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கல்விக் கூடங்களிலும் ஐந்தாம் வகுப்புவரை தமிழ் மட்டுமே பயிற்று மொழியாகவும், பாடமொழியாகவும் இருக்க வேண்டும். ஆறாம் வகுப்பு முதல் அனைத்து நிலைகளிலும் ஆங்கிலம் ஒரு "மொழிப்பாடமாக" மட்டுமே கற்பிக்கப்படலாம்.

பொறியியல், சட்டம், மருத்துவம், தொழில் நுட்பங்கள் உள்ளிட்ட உயர் கல்வித் துறைகள் அனைத்திலும், தமிழ் வழிக் கல்வியையே நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும்.

தமிழக அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகள் அனைத்திலும், தமிழ்வழிக் கல்வி பயின்றவர்க்கே வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்" என்ற கோரிக்கைகளை நடைமுறைப்படுத்தக் கோரி சிலம்பொலி செல்லப்பனார் தலைமையில் சென்னையில் நடைபெற உள்ள சாகும்வரை பட்டினிப் போராட்டத்தை ஆதரித்துத் தமிழகத்தின் பலவேறு பகுதிகளிலும் 23.3.99 செவ்வாய்க்கிழமை அன்று ஒருநாள் அடையாளப் பட்டினிப்போர் நடைபெற்றது.

எழுச்சியோடு நடைபெற்ற இந்த அடையாளப் பட்டினிப் போர் நிகழ்ச்சி, தமிழ்ச் சான்றோர் பேரவை உள்ளிட்டப் பல்வேறு தமிழ்த் தேசிய அமைப்புகளால் முன்னெடுக்கப்பட்டது. தேவை ஏற்பட்டால் பொதுச் சிக்கல்களில் தங்கள் அமைப்பு அடையாளங்களைத் தாண்டி தமிழ்த் தேசிய இயக்கங்களும், தமிழர் நலன் நாடும் பல்வேறு அமைப்புகளும் ஒருங்கிணைந்து செயல்பட தயாராக உள்ளனர் என்பதையே இந்நிகழ்ச்சி எடுத்துக் காட்டியது. தொடர்ந்து இக்கோரிக்கைகளுக்காய் நடத்தப்படும் விளக்கப் பொதுக்கூட்டங்களும், கலந்துரையாடல்களும், கருத்தரங்குகளும் பல நூற்றுக்கணக்கான இளைஞர்களையும் தமிழ்த் தேசிய உணர்வு கொண்டோராய் மாற்றி வருகிறது.

சாகும்வரைப் பட்டினிப் போரில் ஈடுபடவுள்ள 100 தமிழின உணர்வாளர்களின் போராட்டத்தை ஆதரித்துத் தொடர்ச்சியான செயல்பாடுகளை முன்னெடுக்கத் தமிழ்த் தேசிய இயக்கங்கள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ள இப்போக்கு வரவேற்கத்தக்கது.

●●



படிப்பகம்

www.padippakam.com

# மதுரையில் நடந்த ஈழத்தமிழர் ஆதரவு எழுச்சி மாநாடு

1997ம் ஆண்டு சனவரி திங்களில் தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின ரால் நடத்தப்பட இருந்த "தமிழர் எச்சரிக்கை மாநாடு" தமிழக அரசால் தடைசெய்யப்பட்டது. தடையை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அவ்வழக்கில் உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பில், காவல் துறை "தமிழர் எச்சரிக்கை மாநாட்டை" த்தடைச் செய்ததைக் கடுமையாய்க் கண்டித்து மாநாடு நடத்த அனுமதி தரவேண்டும் என்று உத்தரவிட்டது.

இவ்வடிப்படையில் கடந்த மார்ச் திங்கள் 7ம் நாள் மதுரையில் தமிழின உணர்வாளர்களின் பேராதரவோடு "ஈழத்தமிழர் ஆதரவு எழுச்சி மாநாடு" நடத்தப்பட்டது. காலை முதல் நள்ளிரவு தாண்டியும் கூட நடத்தப்பட்ட இம்மாநாடு தமிழ் மண்ணில் புத்தெழுச்சியோடு உருவாகிவரும் தமிழ்த் தேசிய உணர்வை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது.

மாநாட்டு அரங்கம் முழுமையாய் நிறைந்திருந்ததோடு, அரங்கிற்கு வெளியிலும் ஆயிரக்கணக்கானோர் அமர்ந்து மாநாட்டு நிகழ்சிகளைத் தொலைக்காட்சிப் பெட்டி மூலமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தனர். தமிழகத்தில் இருக்கும் பல்வேறு தமிழ்த் தேசிய அமைப்புகளும், தமிழின உணர்வாளர்களும், தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவரும், தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் அமைப்பாளருமான நெடுமாறன் அவர்களின் கீழ் ஒருங்கிணைந்து நடத்திய இம்மாநாடு, எத்தனை தடைகள் வந்தாலும் அவைகளைப் பொருட்படுத்தாமல் இன்னும் தீவிரமாய்ச் செயல்படும் எண்ணம் கொண்ட தமிழ் ஆர்வலர்கள் பெருகிவிட்டதை உலகிற்கு எடுத்தியம்பியது.

தமிழகம் முழுவதிலிருந்து இனஉணர்வாளர்களும், ஆர்வலர்களும் அதிகாலையிலிருந்தே மாநாட்டுத் திடலை நோக்கி வந்த வண்ணமிருந்தனர். தமிழறிஞரும், தமிழுக்கும் தமிழர்களுக்கும் கேடு நேரிட்ட போதெல்லாம் எதிர்த்துப் போராடியவரும், இறுதி மூச்சு அடங்கும் வரை தமிழுக்கென்றே வாழ்ந்தவருமான சாலையார் பெயரில் அமைக்கப்பட்டிருந்த அரங்கம் நிகழ்ச்சிகள் தொடங்கும் முன்னரே நிரம்பி வழிந்தது.

தேனிசைச் செல்லப்பா அவர்களின் தமிழ் உணர்வுப் பாடல்கள் ஏற்படுத்திய எழுச்சிஅலைக ளோடு மாநாடு துவங்கியது. ஈழத்திற்காய் களத்தில் துவளாது நின்று போராடும் மாவீரர்களாம் தமிழீழ விடுதலைப் புலிகளையும், தமிழீழத் தேசியத் தலைவரும் தமிழரின் வீரத்தை விடுதலையுணர்வை உலகிற்கே தெள்ளத் தெளிவாய் எடுத்துக் காட்டியவருமான மாவீரன் பிரபாகரனின் பெயரையும் பாடல் வரிகளில் கொண்டுவரும் போதெல்லாம் ஏற்பட்ட வரவேற்பால் அரங்கமே அதிர்ந்தது. இனத்துரோகி களின் காதில் இவ்வதிர்வு உறுதியாய் இடியெனத் தாக்கியிருக்கும். தேனிசையாரின் பாடல்கள் ஏற்படுத்திய உணர்வலைகள் கூட்டம் முழுமையையுமே எழுச்சி கொள்ள வைத்தன.

அதன் பின்னர், மதுரை ஆதீனம் அவர்களின் தொடக்கவுரை கூட்டத்தினரின் உணர்வோடு ஒத்துப்போக, இறுதியில் மதுரை



படிப்பகம்

www.padippakam.com

ஆதீனம் அவர்கள் "தமிழ் ஈழம்" என்று எடுத்துக் கொடுக்க கூட்டம் முழுமையும் "அடைந்தே தீரு வோம்" எனத் தொடர்ந்து முழங்கியது.

இதன்பின் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் படத்தைத் திறந்து வைத்து அருட் தந்தை சேவியர் அவர்கள் உரையாற்றினார்கள். பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களைப் பற்றி – எந்த அளவிற்கு ஆழமாக, யாராலும் அசைக்கமுடியாத அழுத்தமான இன உணர்வாளர் என்பதையும், வாழ்நாள் முழுமையும் தமிழுக்காய் உழைத்த தன்மையையும் தமிழர்கட்காய் போராடிய மாவீரர்களின் வரிசையில் முதலிடம் பெறக் கூடியவர் என்பதையும் – விளக்கிப் பேசியதோடு, வரிக்குவரி கைதட்டலைப் பெற்றுக்கொடுத்த கவிதையொன்றினையும் படித்தார்.

பின் தமிழ் வேழமாய் வாழ்ந்து மறைந்த தமிழறிஞர் சாலையாரின் படத்தைப் பாவலர் இன்குலாப் அவர்கள் திறந்து வைத்து உரையாற்றினார். மறைந்து விட்டாலும், தமிழருக்காய் பாடுபட்டவர்களை என்றும் மறக்காத நன்றியுணர்வு உள்ளவர்கள் தமிழர்கள் என்பதை யும் அம்மாவீரர்களின் பயணத்தைத் தொடர ஆயிரமாயிரமாய் தமிழர்கள் அணிதிரள்வர் என்பதையும் இந்நிகழ்ச்சி எடுத்துக் காட்டியது.

இதன்பின் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களுக்கும், தமிழ்வேழம் சாலய்யார் அவர்களுக்கும் பிந்சிறப்பு விருதுகள் வழங்கப் பட்டன. "உலகப் பெரும் தமிழன்" என்ற பெயரில் வழங்கப்பட்ட இவ்விருதுகளை தாமரை பெருஞ்சித்திரனாரும், சாலினியாரும் பெற்றுக் கொண்டனர். சான்றோர் பேரவையின் நிறுவனர் நா. அருணாசலம், மூத்த தமிழறிஞர் தமிழண்ணல் ஆகியோர் மூலம் வழங்கப்பட்ட இவ்விருதுகளை தாமரை பெருஞ்சித்திரனாரும், சாலினியாரும் பெற்றுக் கொண்டனர். இதைப் போல் இசைவாணர் தேனிசை செல்லப்பா அவர்களுக்கு முன்னாள் அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் மூலம் "பாசறைப் பாணர்" என்னும் விருது வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சி மாநாட்டில் கலந்து கொண்ட அனைவரையும் நெகிழ வைத்த ஒன்று.

இதற்கடுத்து மாநாட்டுத் தலைவராய் பழ. நெடுமாறன் அவர்களை முன் மொழிந்து தமிழர் தேசிய இயக்கப் பொதுச்செயலாளர் கா. பரந்தாமன் அவர்களும், வழிமொழிந்து தமிழ் தமிழர் இயக்கத் தலைவர் செ. வேலுச்சாமி அவர்களும் உரையாற்றினர். அடுத்து பழ. நெடுமாறன் அவர்களின் தலைமையுரை. அரங்கமே அமைதி யாய், ஆர்வமாய், இடையிடையே கைத் தட்டல்களோடு பழ. நெடுமாறன் அவர்களின் உரையை செவிமடுத்தது. தலைமையுரைக்குப்பின் சற்றுநேர உணவுக்கான இடைவேளை.

பின் மீண்டும் மாநாட்டு நிகழ்ச்சிகள் துவங்கின. முனைவர் சாலினியார் தலைமையில், தாமரை பெருஞ்சித்திரனார், அற்புதம் குயில்தாசன், தேன்மொழி, கவிதா, சகோதரி ஆர்த்தி ஆகியோர் கலந்துகொண்ட மகளிர் அரங்கம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து மாணவர் அரங்கம் நடந்தது. அதற்குப்பின்னால் முன்னாள் வெளியுறவு செயலா ளர் ஏ.பி. வெங்கடேஸ்வரன் தேசிய விடுதலை முன்னணியின் தலைவர் பீட்டர் மித்ரா, உள்ளிட்ட பல்துறை சார்ந்தோரும் பேசினர். தொடர்ந்து தமிழ் தமிழர் இயக்கத்தின் அரசியல் நெறிக்குழு உறுப்பினரும், நந்தன் இதழ் சிறப்பாசிரியருமான பேரா. சுப. வீரபாண்டியன், தமிழ் தேசப்பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளர் பெ. மணியரசன், உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கத்தின் தலைவர் மெல்கியோர், அறிவுமதி, பெரியார் தாசன், பாவாணன், பெரியார் திராவிடர் கழக விடுதலை இராசேந்திரன் ஆகியோர் உள்ளிட்ட பல்வேறு அரசியல் இயங்கங்களின் தலைவர்கள் உரையாற்றினார்கள்.

இதையடுத்து பல்வேறு தலைவர்கள்



படிப்பகம்

www.padippakam.com

செயல்வீரர்களின் முன்மொழிந்தலோடும், அரங்கத்தில் மட்டுமின்றி தொடர்ந்து அரங்கிற்கு வெளியேயும் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தின் கைத்தட்டலோடும், பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இறுதியாக தமிழ் தமிழர் இயக்கப் பொதுச்செயலாளர் தியாகு அவர்கள் உரையாற்றினார். இதனையடுத்து மீன்டும் தேனிசைச் செல்லப்பா அவர்களின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. நள்ளிரவு தாண்டி நடைபெற்றாலும் மக்களின் பலத்த வரவேற்போடு நடந்த இந்நிகழ்ச்சியோடு மாநாடு முடிவடைந்தது.

பெரிய அரசியல் கட்சிகளால்தான் இப்படிப்பட்ட மாநாடுகளை நடத்த முடியும் என்ற மாயை தகர்க்கப்பட்டது. தமிழ் உணர்வை, இனத்திக்காக செயல்படும் வீரர்களின் செயல்பாட்டை யாராலும் தடுக்க முடியாது என்பது உறுதியாக்கப்பட்டது.

தொடர்ந்து, தமிழின எதிரிகளும் துரோகிகளும் பல்வேறு இதழ்கள் மூலமும், நேரிடையாகவும் கேலிசெய்தும் கொச்சைப்படுத்தியும் இங்குள்ள உணர்வாளர்களை அச்சுறுத்தும் விதத்திலும் செயல்பட்டுவந்தாலும். நீறுபூத்த நெருப்பாய்க் கிடக்கும் தமிழ் உணர்வை நம்மால் பெரும்தீயாய்க் கிளர்ந்தெழச் செய்யமுடியும் என்ற உண்மை அறியப்பட்டது.

*"எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்*
*இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டு"*

என்ற பாவேந்தர் வரிகள் மீண்டும் எதிரிகளுக்கு நிறைவூட்டப்பட்டது உலகெங்கும் அகதியாய்ச் சிதறி வாழும் தமிழ் மக்களின் நெஞ்சில் தமிழகத் தமிழர்களைப் பற்றிய நம்பிக்கை வளர்த்தெடுக்கப் பட்டது. ஆயிரம் வேறுபாடுகள் எங்களுக்குள் இருந்தாலும், தமிழினத்துக்கு கேடு வரும் எனில் அனைத்தையும் களைந்து விட்டு ஓரணியில் ஒன்று திரண்டெழுவோம் என்ற உண்மை உலகிற்கு உணர்த்தப்பட்டது.

— செ. வேலுச்சாமி

## நடைபெற்றவை

16.3.99 அன்று மதுரை மாவட்டம் கருமாத்தூரில் உள்ள அருள் ஆனந்தர் கல்லூரியில், "வகுப்பு வாதம் இங்கே... சனநாயகம் எங்கே?" என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கம் நடைபெற்றது.

"வகுப்புவாதம் பெண்களுக்கு விடுக்கும் சவால்கள்"

"வகுப்பு வாதம் தலித்துகளுக்கு விடுக்கும் சவால்கள்"

"வகுப்புவாதம் தமிழர்களுக்கு விடுக்கும் சவால்கள்"

"வகுப்புவாதம் பாட்டாளிகளுக்கு விடுக்கும் சவால்கள்"

ஆகிய தலைப்புகளில் கருத்தரங்க அமர்வுகள் நடத்தப்பட்டன. "வகுப்புவாதம் தமிழர் களுக்கு விடுக்கும் சவால்கள்" என்ற தலைப்பில் பொதுச் செயலாளர் தியாகு உரையாற்றினார். இந்நிகழ்ச்சி அருள் ஆனந்தர் கல்லூரியிலுள்ள அய்க்கஃப் மாணவர்களால் நிகழ்த்தப்பெற்றது.

●●

அறிவுச்சுடர் நடுவம் சார்பாக 14.03.99 ஞாயிறு அன்று தியாகு எழுதிய "மார்க்சின் தூரிகை" மற்றும் மருதமுத்து எழுதிய "சமூக நீதிப் போராட்டம்" ஆகிய நூல்களைத் திறனாய்வு செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றது திரு. கனகவேல் மேற்கண்ட நூல்களைத் திறனாய்வு செய்து உரையாற்றினார். அதன்பின் "மதமாற்றம், மதச்சிக்கலா? அரசியல் சிக்கலா?" என்ற தலைப்பில் திரு. மனோகரன் உரையாற்றினார்.

●●



படிப்பகம்

www.padippakam.com

## சாதி மறுப்புத் திருமண – குடும்ப நல இயக்கத் துவக்கவிழா

மதுரையில் 20.3.99 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு சாதி மறுப்புத் திருமண – குடும்ப நல இயக்கத்தின் தொடக்கவிழா நடைபெற்றது. சாதி மறுப்புத் திருமணம் "செய்துள்ளோர்க்கு சாதியற்றோர் பட்டியல் ஏற்படுத்தி இட ஒதுக்கீடு வழங்கு", என்ற கோரிக்கையை முதன்மைக் கோரிக்கையாய் வைத்துள்ள இவ்வியக்கத்தின் பொதுக்கூட்ட நிகழ்ச்சியின் போது சாதி மறுப்புத் திருமண – குடும்ப நல இயக்கத்தின் தலைவர் தோழர் மு. இராசேந்திரன் தலைமை தாங்க, தோழர் அ. கிருட்டிணன் வரவேற்புரையாற்றினார். இவியக்கத்தின் செயலாளரான தோழர் மு. தமிழ்ப்பித்தன் தொடக்கவுரையாற்றினார்.

தோழர்கள் தியாகு, ஓவியா, அருணா, த. பாண்டியன், துரை, சம்பத், உட்பட்ட பலர் உரையாற்றினர். தோழர். தொ. அ. மேரி நன்றி கூறினார்.

## தமிழர் பண்பாட்டுக் கழகத்தின் வீரவணக்க நாள்

தமிழர் பண்பாட்டுக் கழகத்தின் சார்பில் 25.01.99 காலை 10 மணிக்கு, சத்தியமங்கலம் புதிய பேருந்து நிலைய வாயிலில் மொழிப் போர் தியாகிகளுக்கான வீரவணக்க நாள் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு 1965இல், மொழிக்காப்பு போராட்டத்தில், தனக்குத்தானே மண்ணெண்ணெய் ஊற்றிக் கொண்டு, தீயிட்டு மாண்ட தியாகி முத்துவின் உடன்பிறந்த திரு. பெ. மாரியப்பன் முன்னிலை வகித்தார். தமிழர் பண்பாட்டுக் கழக அவைத் தலைவர் தி. அரங்கசாமி, வீ. சுந்தர்ராக, செயலாளர் அ. வேங்கையன், பொருளாளர் ச. நீ. ஆறுமுகம் மற்றும் செயற் குழு உறுப்பினர்களான இரா. பழனிச்சாமி, குமார. ரவிக்குமார், பெ. நடராசன் ஆகியவர்களுடன் கோபி இனியன், அன்பு, து. நா. பாளையம் கதிரவன், சுந்தரராக, குணசேகரன், தேவராக ஆகியோரும் சக்தி–சீவா மாரப்பன், த.மு.மு.க. பாரூக், தாய்த் தமிழ் பள்ளி கா. வெள்ளியங்கிரி, க. சரவணன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். மொழிப்போர் தியாகி முத்துவின் நினைவைப் போற்றும் முழக்கங்களுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

## கன்னட திரைப்பட விழாவிற்கு எதிர்ப்பு: 47 தோழர்கள் கைது.

கன்னட மாநிலத்திற்கும், பிறமாநிலங் களுக்கிடையிலான பண்பாட்டு உறவை வளர்த்தெடுக்கும் விதமாய் ஒவ்வொரு மாநிலங்களிலும், கன்னட திரைப்பட விழாவை கர்நாடக அரசின் தகவல் மற்றும் விளம்பரத்துறை நடத்தி வருகிறது. அதன் அடிப்படையில் சென்னையிலும் கன்னடத் திரைப்பட விழா சென்ற மாதம் நடத்தப்பட்டது.

தமிழகத்தின் உயிர்நாடிச் சிக்கலான காவிரியாறு முதல் கன்னட மாநிலத்தில் தமிழர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பது வரை அனைத்திலும் கன்னட இனநலனை முன்னிறுத்தியே கன்னட அரசுகளும், கன்னட அரசியல் கட்சிகளும் இயங்கி வருகின்றன. அத்தோடு, தமிழகத்திலும் கன்னட திரைப்பட விழாவை நடத்தி பார்ப்பனர் பாலச்சந்தரைக் கூட, தமிழ்மண்ணில் நின்று கன்னடர்களுக்கு ஆதரவாக பேசத் துணிவு கொடுத்துள்ளனர். இத்தகைய கன்னட இனவெறிப்போக்கினை தமிழ் மண்ணிலே நிகழ்த்தி காட்டும் போக்கிற்கு எதிராக கலைவாணர் அரங்கின் முன் பெரியார் திராவிடர் கழகத்தினர் ஆனூர் ஜெகதீசன் முன்னிலையில் கண்டன சாலை மறியல் நடத்தினார்கள். இதில் தமிழ் தமிழர் இயக்கத் தோழர்கள் உட்பட 47 பேர் கைது செய்யப் பட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

# மடமை வளர்க்கும் தமிழ் இதழ்கள்

தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள், தொலைக்காட்சிகள், வானொலிகள், பத்திரிக்கைகள் பெரும்பாலும் தமிழ்–தமிழர் நலனுக்காகவே பாடுபடுவதாக கூறிக் கொண்டே தமிழர்களுக்கு கேடான அனைத்து செயல்களையும் செய்து வருகின்றன. ஆத்திகம்–நாத்திகம் என்ற கோட்பாடுகள் மனிதன் தோன்றிய காலம் முதலே இருந்து வருகின்றன. பலவகையான அறிவியல் வளர்ந்த போதிலும் இந்த அறிவியல் ஊடகங்களில் புகுந்து மதவாதிகள் தங்கள் பக்தியை வளர்க்க முனைந்து உழைத்து வருகிறார்கள். நாம் அன்றாடம் படிக்கும் நாளிதழ்கள் மக்களிடையே மடமையை புகுத்தும் பணியை வேகமாகவே செய்து வருகின்றன. "ராசிபலன்" செய்தியை தினந்தோறும் வெளியிடுகின்றன. இப்போது பிறந்த நாள் பலன் வெளியிடுகின்றன. இதெல்லாம் எவ்வளவு பொய்மையானவை என்று இவர்களுக்கு தெரியாதா? தெரியும். தமிழகத் தின் இத்தனை கோடிப் பேர்களும் 12 ராசிக்குள் அடக்கம், என்பதில் சிறு உண்மையும் இல்லை என்பதை அறிந்தும் இந்த மெத்த படித்த மேதாவிகள், அறிவியல் உணர்வை மக்கள் பெற்று விடக்கூடாது என்றே இந்த அறியாமையை அகற்றாமல் பாதுகாக்கின்றார்கள். வெள்ளி–ஞாயிறு கிழமைகளில் "ராசிபலன்" சிறப்பு மலர்கள்தான். உங்கள் எதிர்காலம், காலம் உங்கள் கையில், நல்ல காலம் என்கிறார்கள். உங்கள் ராசிபலன் என்கிறார்கள். யோகம் என்கிறார்கள், பத்திரிகை முழுவதும் ஆன்மீகம்தான். இதுதவிர தனியே வேறு ஆன்மீக பகுதியையும் வெளியிடுகிறார்கள். தமிழர்கள் இந்த ஆன்மீகம் மட்டும்தான் தெரிந்துக்கொள்ள வேண்டுமா?. பகுத்தறிவு மற்றும் அது தொடர்பான செய்திகளுககுச் சமமாக இடம் ஒதுக்குவதுதான் நியாயம், இங்குள்ள பகுத்தறிவு இயக்கங்கள் இதழ்களின் இந்த போக்கை எதிர்த்து போராட வேண்டும். அய்யாவின் தொண்டர்கள் இந்த இதழ்களை சாலையில் போட்டு எரித்து தங்கள் எதிர்ப்பைச் காட்டவேண்டும். மனிதர்களுக்கு எப்போதும் கேடுகளையே செய்துவரும் இந்த மதவாதிகளை அம்பலப்படுத்த வேண்டும்.

–ச. நாத்திகநந்தனார்

## முதலமைச்சரின் நிதிநிலை அறிக்கையில் உண்மைக்கு மாறான தகவல்

தமிழகத்தில் மொழிச் சிறுபான்மையினருக்கான பள்ளிகள் தவிர பிற பள்ளிகளில் தமிழ்மொழி கட்டாயப் பாடமாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது. (முரசொலி, சென்னை 8.3.99, பக்கம்–5.)

முதலமைச்சர் சட்டப்பேரவையில் வாசித்துள்ள நிதிநிலை அறிக்கையில் கூறியிருக்கும் இந்தத் தகவல் உண்மைக்கு மாற்றானது. தமிழகத்திலுள்ள ஏராளமான தனியார் பள்ளிகளில் (சிறுபான்மையினருக்கான பள்ளிகளில் மட்டுமல்ல) தமிழ் மொழி கட்டாயப் பாடமாக கற்பிக்கப்படுவதில்லை என்பதே உண்மை.



படிப்பகம்

www.padippakam.com

# சட்டமன்றமும் - கேலி கூத்துக்களும் - மதுரைத்தம்பி

அண்மையில் சட்டமன்றத்தில் நடைபெற்ற அடிதடிக் கூத்துகள் தெருவோரத்தில் நின்று கலாட்டா செய்திடும் குடிகாரனைக்கூட, வெட்கித்தலை குனிந்திட வைத்துள்ளது. ஏற்கனவே, சட்டமன்றத்தில் பண்ருட்டி இராமச்சந்திரனை அடித்துவிட்டு அதற்கு "தட்டுதல்" என்று தமிழ் அகராதிக்கு புது விளக்கம் தந்த தாமரைக்கனி தான் இந்த தடவையும் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகத்தை தனது கவசமோதிரக் கையால் மூக்கில் குத்தியுள்ளார்.

இந்த சிறிய குத்தலுக்கு "கொஞ்சல்" என பெயரிட்டு தாமரைக்கனி அழைப்பார் என்று நினைத்த வீரபாண்டி ஆறுமுகத்திற்கு சிறிது நேரத்தில் மூக்கில் குருதி கொட்டவே, அதை கைக்குட்டையால் அவர் துடைத்து எடுக்கும் முன்னரே, ஆளும் சட்டமன்ற புலிபோத்துகள் தாமரைக்கனி மீது சீறிப்பாய்ந்து அவரை துவைத்து எடுத்துள்ளனர்.

இந்த சண்டைக்காட்சிகளுக்கிடையில், சட்டமன்ற பேரவைத்தலைவர் பிடி.ஆர். பழனிவேல்ராசன் அவர்கள் தாமரைக்கனியை பதினைந்து நாள் சிறையில் தள்ள உத்தரவிட்டார். உடனே. சென்னை உயர்நீதிமன்றம் ஆட்கொணர்வு பிரிவு சட்டத்தின் கீழ் விடுதலை செய்ய உத்தரவிட்டது. மீண்டும் சட்டமன்றம் கூடி, ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றி தாமரைக்கனியை சிறையில் தள்ளிட, மீண்டும் உயர்நீதி மன்றம் அவரை விடுதலை செய்துள்ளது.

இப்போது எல்லா அரசியல் கடசிகளும், எல்லா அரசியல் நாளேடுகளும் சட்டமன்ற உறுப்பினரை தண்டிக்கும் அதிகாரம் சட்டமன்றத்திற்கு உள்ளதா? அல்லது நீதி மன்றத்திற்கு உள்ளதா? என்ற விவாதங்களில் களம் இறங்கியுள்ளன.

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் கீழ் உண்மையில் அதிகாரம் பெற்றவையாக திகழ்வது தில்லி நாடாளும்மன்றமாகும். மாநில சட்டமன்றமோ தில்லி வல்லாதிக்கவாதிகளுக்கு துப்பு கொடுத்திடும் கங்காணிமன்றம் மட்டுமல்ல, தான் நிறை வேற்றிய சட்ட முன் வரைவுகளை அனுப்பும் வெறும் (ம)சோதா மன்றமே! தில்லி அதிகார குண்டர் படை மன்றத்தை எதிர்த்து மோதுவதற்கு திரணியற்ற நமது சட்டமன்ற சோதாக்கள் தங்களுக்குள் அடித்துக் கொள்வதற்கும், மக்கள் பணத்தை கொள்ளையடிப்பதற்கும் மட்டுமே சட்டமன்றத்தை பயன்படுத்தி வருகின்றனர்.

அது போல் உயர்நீதிமன்றமும் தில்லிவல்லாதிக்க நெறி முறைச்சட்டங்களால் கட்டுப்பட்ட ஒன்றாகும். உயர்நீதி மன்றமும் தன்னை தனித்து இயங்குவதாக காட்டிக் கொண்ட போதிலும், நீதிமுறைச் சட்டங்களுக்கேற்ப, நீதிபதிகளும் அரசியல் கட்சிகளின் செல்வாக்கிற்கு உட்பட்டே இயங்கி வருகின்றனர். அடிப்படையில் நீதிமன்ற நடவடிக்கைகள் பெருமபாலும் தில்லி வல்லாண்மை அரசிற்கு சாதகமாகவே அமைந்து வருவதும் கண்கூடான ஒன்றாகும்.

சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகள் கடந்தும் கூட, பல்வேறு மாநில அரசுகள் தில்லி கொடூர கரங்களின் போர்வாளான 356-வது பிரிவிற்கு இரையாகும் போதெல்லாம் நீதி மன்றங்கள் தனது அதிகார வாலைச் சுருட்டிக்கொண்டு, தில்லி எஜமானர்களுக்கு காவல் காத்தே வந்திருக்கின்றன.

இந்நிலையில், அடிமை மன்றங்களான சட்டமன்றமும், நீதி மன்றமும் தங்களை அதிகாரமுள்ள மன்றங்களாக மக்களிடம் காட்டிக் கொள்வது வெட்கக் கேடான செயலாகும்.

தமிழ்த் தேசிய இனமக்களது அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்காக தில்லி வல்லாதிக்க கும்பலுக்கு எதிராக போராட வேண்டிய தமிழக சட்டப்பேரவை மன்றம் சபாநாயகர்கள் மாநாடு கூட்டி, நீதிமன்ற தலையீட்டிற்கு எதிராக போராடப் போவதாக கூறுவது தமிழக மக்களை திசைதிருப்புகின்ற முயற்சியாகும். பிச்சைக்காரர்கள் ஒன்றுகூடி மடம் கட்டமுடியுமா? அதுபோல் நீதி மன்றத்தை எதிர்த்து போராடுவது என்பது நிழலோடு போராடுவதற்கு ஒப்பாகும்.


எனவே, தமிழ்த்தேசிய இனம் தனது அரசியல் பொருளாதார பண்பாட்டு விடுதலையை வென்றேடுக்காதவரை நீதிமன்றமும், சட்டமன்றமும் ஒன்றுக்கொன்று அதிகாரமுள்ளதாகவும், சமத்துவமுள்ளதாகவும் இயங்கிட முடியாது. ஏனெனில், பார்ப்பன - பனியா அதிகாரவர்க்கம் இவற்றை தேசிய இனங்களை ஒடுக்குகின்ற கருவிகளாகவே பாவித்து வருகின்றன. எனவே, பொதி சுமக்கும் மாடுகளில் வலதென்ன? இடதென்ன? இவ்விரண்டு மன்றங்களும் தில்லியின் தார்க்குச்சிகளுக்கேற்ப ஆட்டுவிக்கப்படுகின்றது என்பதே யாராலும் மறுக்க முடியாத உண்மையாகும்.

படிப்பகம்

www.padippakam.com



## ஏப்பிரல் 29. பாரதிதாசன் பிறந்த நாள்



**கெடல் எங்கே தமிழின் நலம்**
**அங்கெல்லாம் தலையிட்டு கிளர்ச்சி செய்க!**

படிப்பகம்